VANAVARAYAR
Institute of Agriculture
Enriching India

உழவர்
சிந்தனைக் களஞ்சியம்
மலர் 9 | சிறப்பிதழ் – 2025



# உழவர்
# சிந்தனைக் களஞ்சியம்

தற்பொழுது புதுப்பொழிவுடன்...

## வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

மணக்கடவு, பொள்ளாச்சி - 642 103









VANAVARAYAR Institute of Agriculture

VIA

# VANAVARAYAR
## Institute of Agriculture
Enriching India

(கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றது மற்றும் புது தில்லி, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் அங்கீகாரம் பெற்றது)

## இளங்கலை வேளாண்மை (நான்கு வருடம்)

கல்வி தகுதி +2 [ குரூப் 1, குரூப் 2, குரூப் 2A ]

தரமான கல்வி, ஆராய்ச்சி & வேளாண் விரிவாக்கம் ஆகியவற்றின் மூலம் வேளாண் உற்பத்தி மற்றும் நிலைத்தன்மையை மேன்படுத்துவதும், வேளாண் அமைப்புகளின் துணை கொண்டு கிராமப்புற வளங்களை பாதுகாத்து அதனை மேன்படுத்துவதும் இக் கல்லூரியின் நோக்கமாகும்.

### மாணவர்களின் கற்றல் மற்றும் செயல் திறனை மேன்படுத்த

- 250 ஏக்கர் விளை நிலம்
- 16 மேன்படுத்தப்பட்ட வகுப்பறைகள்
- 18 ஆய்வகங்கள்+1 'B Class'வானிலை ஆய்வு மையம்
- 14 பயிற்றுவிக்கும் மையம்
- 14 உற்பத்தி மையம்

### சிறப்பு அம்சங்கள்

- 650 பேர் இடவசதி கொண்ட இரண்டு மகளிர் விடுதி
- 450 பேர் இடவசதி கொண்ட மாணவர் விடுதி
- 470 பேர் அமரக்கூடிய உணவகம்
- 24 X 7 கண்காணிப்பு
- 6 ஏக்கர் விளையாட்டு திடல்

SAKTHI GROUP

NM 100
1923 - 2014
CENTENARY CELEBRATIONS

NIA
EDUCATIONAL INSTITUTIONS | Enlightening Minds

Visit at : https://www.via.ac.in

மேலும் விபரங்களுக்கு : +91 7402618001 - +91 9942908410

# உழவர்
# சிந்தனைக் களஞ்சியம்


⁜ மலர் 9 ⁜ மார்ச் 2025 (மாசி – பங்குனி) ⁜ சிறப்பிதழ்



| | | |
|---|---|---|
| வெளியீடு | : | **வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்**<br>மணக்கடவு, பொள்ளாச்சி - 642 103 |
| நிறுவனர் | : | அருட்செல்வர் டாக்டர் **நா. மகாலிங்கம்** |
| தலைவர் | : | முனைவர் **ம. மாணிக்கம்**<br>தலைவர், என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்கள், பொள்ளாச்சி |
| தாளாளர் | : | திருமதி. **கி. கற்பகவள்ளி**<br>தாளாளர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் |
| ஊக்கம் | : | **பேராசிரியர். சி. இராமசாமி,** பி எச்.டி.<br>செயலாளர், என்.ஐ.ஏ கல்வி நிறுவனங்கள், பொள்ளாச்சி<br>**பேராசிரியர். நா. கெம்பு செட்டி,** பி எச்.டி.<br>இயக்குனர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்<br>**பேராசிரியர். கு. பிரபாகர்,** பி எச்.டி.<br>முதல்வர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் |
| ஒருங்கிணைப்பாளர் | : | முனைவர் **கா. காளிதாஸ்**<br>இணை பேராசிரியர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்<br>முனைவர் **பொ. மகுடீஸ்வரி**<br>உதவி பேராசிரியர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் |
| தொகுப்பு | : | முனைவர் **த. துர்காதேவி**<br>செல்வி **கு. கிருத்திகா**<br>முனைவர் **எம். ரம்யா**<br>முனைவர் **செ.கா. சங்கரி**<br>முனைவர் **கோ. தாமோதரன்**<br>உதவிப் பேராசிரியர்கள்,<br>வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் |
| வடிவமைப்பு | : | திரு. **எஸ். சிற்பி பால சுப்ரமணியம்**<br>ஒருங்கிணைப்பாளர், வேளாண் அபிவிருத்தி மையம்<br>வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்<br>திரு. **கா. முருகானந்தம்,**<br>ஒருங்கிணைப்பாளர், உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் |
| விநியோகம் | : | திரு. **ஆ. குமாரச் செல்வன்,** நூலகர்<br>திரு. **செ. சரவணன்,** நூலக உதவியாளர்<br>வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் |

# பொருளடக்கம்


| வ. எண் | இடம் மற்றும் மாவட்டம் | கட்டுரைகள் தலைப்பு | ப. எண் |
|---|---|---|---|
| 1 | சிறப்பு கட்டுரை | இந்திய விவசாயத்தின் ஒளியும் நிழலும் | 04 |
| 2 | சிறப்பு கட்டுரை | பசுமை பயணங்கள் மாணவர்கள் கற்ற களக்கதைகள் | 06 |
| 3 | ஆனைமலை, கோவை | துரோணா மில்லட் உணவுகள் ஒரு தொழில்முனைவோரின் பயணம் | 08 |
| 4 | குளத்தூர், சேலம் | STUDENT READY-திட்டத்தின் கீழ் தொழிற்சாலை இணைப்பு பயிற்சி | 10 |
| 5 | வத்தலக்குண்டு, திண்டுக்கல் | லூக்கா ரீடெய்ல் பிரைவேட் லிமிடெட் - உயிரி உர தொழிலில் ஒரு கொள்கை நோக்குடைய முன்னோடி | 13 |
| 6 | பாலக்கோடு, தர்மபுரி | தர்மபுரியின் ABR ஸ்டார்ச் வெற்றிக் கதை | 15 |
| 7 | மோகனூர், நாமக்கல் | தென்னை நார் தொழிலில் உலகளாவிய வர்த்தகத்திற்கு ஒரு பயணம் | 18 |
| 8 | பொள்ளாச்சி தெற்கு, கோவை | பசுமை வழியில் புரட்சியை ஏற்படுத்தும் கிரீன் டெக் பயோ இயற்கை உர நிறுவனம், பொள்ளாச்சி | 20 |
| 9 | சத்தியமங்கலம், ஈரோடு | சேகரிப்பு மையங்கள் மற்றும் வாழை விவசாயிகளின்: கொள்கைப் பார்வை மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு வழிமுறைகள் | 22 |
| 10 | சேந்தமங்கலம், நாமக்கல் | மரவள்ளியின் மாயாஜாலம்: ஸ்ரீ திருமலைவாசன் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் நிறுவனத்தின் வெற்றிக் கதை | 24 |
| 11 | தோகைமலை, கரூர் | ஜெய்ராக் நிறுவனம் - விவசாயிகளின் நம்பிக்கை, பசுமைப் புரட்சியின்முன்னோடி ! | 27 |
| 12 | வாழப்பாடி, சேலம் | SKA டைரி ஃபுட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் ஒரு பார்வை | 29 |
| 13 | உத்தமபாளையம், தேனி | STUDENT READY திட்டத்தின் கீழ் வாஹின் ஹோம் - தொழிற்சாலைப் பயிற்சி | 32 |
| 14 | காவேரிப்பட்டிணம், கிருஷ்ணகிரி | "மாம்பழ நறுமணத்தில் உலகை கட்டிப்போட்ட கிருஷ்ணகிரி ! மாஃப்ரெஷின் வெற்றிக் கதை" | 34 |
| 15 | பென்னாகரம், தர்மபுரி | உலகம் நோக்கும் தர்மபுரியின் பசுமை: மஹா விவசாயப் பொருட்கள் நிறுவனம் | 37 |
| 16 | கபிலர் மலை, நாமக்கல் | விவசாயத்தில் புதிய வழிகாட்டி: கிரிஷி ஆக்ரோ இன்டஸ்ரீஸ் "தஃபார்மொவேட்" | 39 |
| 17 | அரூர், தர்மபுரி | விவசாயத்தில் உயிர்சார் புரட்சியின் முன்னணி: பவன் பயோ டெக் இந்தியா | 41 |
| 18 | கம்பம், தேனி மாவட்டம் | பிரக்ஜா ஜூஸ் - கம்பம் பழங்களின் இயற்கை வரம், ஆரோக்கிய பானங்களின் வெற்றி கதை | 43 |



உழவர் சிந்தனைக் களஞ்சியம் இதழில் வரும் கருத்துக்களுக்கு
அதன் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்



தொடர்புக்கு :
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
(கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நிரந்தர இணைவு பெற்றது மற்றும் புதுதில்லி, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் அங்கீகாரம் பெற்றது)
மணக்கடவு, ஆனைமலை(வட்டம்), பொள்ளாச்சி, கோவை மாவட்டம் - 642 103
தொலைப்பேசி +91 74026 18001, மின்அஞ்சல் : usk@via.ac.in.

அச்சிட்டோர்
**ருக்குமணி ஆப்செட் பிரஸ்**
E-2 சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், கோவை - 641 021.
போன் : 99655 37132 மெயில் : office.rukumaniop@gmail.com

# முதல்வர் உரை

அன்பார்ந்த வாசகர்களே,

விவசாயம் என்பது வெறும் தொழிலாக இல்லாமல், உயிரின் நெடுங்கதையாகவும், நம் சமூகத்தின் முதன்மை ஆதாரமாகவும் திகழ்கிறது. இந்நிலையில், நம் RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேளாண் – தொழிற்சாலை இணைப்பு திட்டம் புதிய பயணத்தின் ஒரு முக்கியக் கட்டமாக விளங்குகிறது.

மாணவர்கள் நிலத்தோடு நெருக்கமாக வாழ்ந்து, தொழில்துறை செயல்பாடுகளை நேரடியாகக் கற்றுக் கொள்வது, அவர்களது அறிவும் அனுபவமும் இணைந்து வளர எவ்வளவோ உதவுகிறது. இந்த பயிற்சிகள், புத்திசாலித்தனத்தையும், நவீன தொழில்நுட்பங்களைச் சந்திக்கும் திறனையும் மாணவர்களில் வளர்க்கின்றன.

“கற்றல் ஒருபக்கம், அனுபவம் மறுபக்கம்!”

இந்த உண்மையை நிரூபிப்பதுபோல், நமது மாணவர்கள் தங்கள் கள அனுபவங்களை இந்நிகழ்வின் மூலம் அழகாக பதிவு செய்துள்ளனர்.

உழவர் சிந்தனை களஞ்சியம் இந்த சிறப்பு வெளியீடு, மாணவர்கள் சந்தித்த தொழில்துறை அனுபவங்களை நமக்கு கொண்டு வருகிறது. இது, எதிர்கால தமிழ்நாட்டு விவசாயத்திற்கு புதிய திசைகளை விதைக்கும் விதையாக அமையும் என நம்புகிறேன்.

நமது மாணவர்கள் காணும் கனவுகள், அவர்கள் பெற்ற கள அனுபவங்களும், நம் நாட்டின் விவசாய வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளங்களாக அமையட்டும் என மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிகழ்வில் பங்கேற்ற நமது மாணவர்கள், பணியாற்றிய தொழில்துறை நிறுவனங்கள், வழிகாட்டிய ஆசிரியர்கள் மற்றும் அழகாகத் தொகுத்து வழங்கிய ஆசிரியர் குழுவுக்கு என் இதயம் கனிந்த நன்றிகளும் பாராட்டுகளும்!

நம்மால் இயலும், நாமும் வெற்றி பெறலாம்!

வாழ்த்துக்களுடன்

**முதல்வர்**



# இந்திய விவசாயத்தின் ஒளியும் நிழலும்

விவசாயம் நம் நாட்டின் முதுகெலும்பு. விவசாயம் இல்லாத நாடு வாழ்வதில்லை என்பது பழமொழி மட்டுமல்ல; அது ஒரு நாட்டின் நிலைமையை வெளிப்படுத்தும் என்பது உண்மைதான். இந்தியா ஒரு வேளாண்மை நாடு. நம் நாட்டில் சுமார் 45% பேர் நேரடியாக அல்லது மறைமுகமாகவோ விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்தியாவின் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் (GDP) 15% முதல் 18% வரை விவசாயத்தின் பங்கு உள்ளது.

### ஒரு பாரம்பரியத்தின் தொடர்ச்சி

இந்தியாவின் விவசாய வரலாறு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்டது. காந்தியடிகளின் ‘‘இந்தியாவின் உயிர் கிராமங்களில்’’ என்ற வார்த்தைக்கேற்ப நம் விவசாயக் குடும்பங்களின் பணி நம் தேசத்தை வளர்த்தது. 1960 களில் ‘‘பசுமை புரட்சி’’ (Green Revolution) ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்தியது. உயர்தர விதைகள், உரங்கள் மற்றும் பாசன வசதிகள் நம் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தன.

### உலகத்தின் உற்பத்தி முன்னணியில் இந்தியா

- **நெல் மற்றும் கோதுமை**: இரண்டாம் இடத்தில் உள்ளது.
- **பழங்கள் மற்றும் காய்கறிகள்**: இரண்டாம் இடத்தில் உள்ளது சுமார் 11% உலக உற்பத்தி இந்தியாவில்தான் உள்ளது.
- **பாலூற்று மற்றும் கால்நடை வளர்ப்பு**: இந்தியா, உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தி நாடாக திகழ்கிறது.
- **மீன்வளம்**: மூன்றாவது பெரிய மீன் உற்பத்தி நாடு.

### அரசின் ஆதரவு மற்றும் நடவடிக்கைகள்

அரசாங்கம் ஆண்டுதோறும் விவசாயத்திற்கு பெரிய அளவில் பட்ஜெட் ஒதுக்கீடு செய்கிறது. 2025 ஆம் ஆண்டில்

மட்டும் 15% கூடுதலாக ரூ. 1.6 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பிரதான் மந்திரி கிசான், பசல் பீமா யோஜனா போன்ற திட்டங்கள் விவசாயிகளுக்கு பாதுகாப்பையும் நிதியையும் தருகின்றன.

**விவசாயத்தில் உள்ள சவால்கள்**

- **குறைவான உற்பத்தி திறன்** - உலக அளவை விட நம் நாட்டு பயிர்கள் குறைவாகவே உற்பத்தியைக் கொடுக்கின்றன.
- **சிறு நில அளவுகள்** - அதிக அளவலான விவசாயிகள் சிறிய நில அளவில் மட்டுமே விவசாயம் செய்கின்றனர்.
- **பிரதிபலிக்கும் விலை இல்லை** - உழைப்புக்கு உரிய விலை கிடைக்காததால், விவசாயிகள் கடன் சுமையில் சிக்கி விடுகிறார்கள்.
- **மாசுபாடு** - ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை அதிகம் பயன்படுத்துவதால் நிலம் மற்றும் நீர் மாசடைகின்றன.

**தொழில்நுட்ப உதவியுடன் வேளாண்மையை புதுப்பித்தல்:**

1. **டிஜிட்டல் வேளாண்மை** - மொபைல் செயலிகள், மேக அவலோகனங்கள், டிரோன் நுட்பங்கள் மூலம் விவசாயம் மாறிக்கொண்டு வருகிறது.
2. **அங்கக விவசாயம்** - இந்தியா உலகின் அதிகமான அங்கக (organic) விவசாயிகளைக் கொண்ட நாடாக மாறி வருகிறது.
3. **ஈநாம் மற்றும் கிரிஷி செயலிகள்** - விவசாயத் தகவல் பரிமாற்றம் இத்தகைய ஆன்லைனில் எளிமையாக முடிகிறது.

**எதிர்கால விவசாயம் எப்படி இருக்க வேண்டும்?**

- கிடங்குகள், குளிர் சேமிப்பு கட்டடங்கள் ஆகியவற்றை அதிகரிக்க வேண்டும்.
- கொள்முதல் மையங்களில் நேரடி சந்தை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.
- புவி மாற்றத்திற்கு ஏற்ற பயிர் இரகங்களை உருவாக்கித் தர வேண்டும்.
- புதிய விஞ்ஞானத்தையும், பாரம்பரிய அறிவையும் இணைத்து புதிய நெறிமுறைகளை உருவாக்க வேண்டும்.

**முடிவுரை**

விவசாயம் என்பது ஒரு தொழில் மட்டுமல்ல; அது நம் கலாச்சாரம், வாழ்க்கை முறை மற்றும் உணவுப் பாதுகாப்பு அனைத்தையும் ஒரே சக்கரத்தில் ஓட்டும் சக்தி. அதை நவீனமாக மாற்றியும், பாரம்பரியத்தை காப்பாற்றியும் வளர்த்தே ஆக வேண்டும்.

“விவசாயம் வளர்ந்தால் நாடும் வளர்கிறது” என்பது காலங்களை கடந்து சொல்லப்படும் உண்மை. இந்திய விவசாயம் மேம்படுவதற்கு அரசு, விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் ஒன்று சேரவேண்டும்.

**தகவல் ஆதாரம்:** இந்திய வேளாண்மைத் துறை, இந்திய பிராண்ட்இக்விட்டி ஃபவுண்டேஷன் (IBEF), இந்திய அரசு மற்றும் பிற நம்பகத்தன்மை வாய்ந்த தரவுகளின் அடிப்படையில்.

உழவர் சிந்தனைக் களஞ்சிய குழு

# பசுமை பயணங்கள் மாணவர்கள் கற்ற களக்கதைகள்

“விவசாயம் வளர்ந்தால் நாடும் வளர்கிறது!” இச்சொல் தமிழரின் நெஞ்சில் புதைந்த ஒரு நிலைத்த நம்பிக்கை. காலம் மாறலாம், தொழில்நுட்பங்கள் வளரலாம்; ஆனால் மனித வாழ்வின் அடிப்படை உணவின் மூலாதாரம் விவசாயம் என்பதில் மாற்றமில்லை.

இன்றைய விவசாயம், பாட்டனார் செய்தது போல நெல் விதைத்து அறுக்கிற தொழிலல்ல. அறிவியலும், மேலாண்மையும், வணிகமும், சமூக பொறுப்பும் கலந்த ஒரு நவீன துறையாக அது மாறியுள்ளது. இந்த மாறுதல்களை நூலில் படிப்பது மட்டுமல்ல, நிலத்தில் கள அனுபவமாக உணர்வதுதான் உண்மையான கற்றல்.

அதனால்தான், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம், இந்திய அரசின் Student READY திட்டத்தின் கீழ், தனது B.Sc. (Honours) மாணவர்களுக்கு கள அனுபவ வாய்ப்புகளை வழங்கி வருகிறது. ஸிகிகீணி (Rural Agricultural Work Experience), தொழில்துறை இணைப்பு (Agro-Industrial Attachment), தொழில்முனைவர் பயிற்சி போன்ற தளங்களில் பயணிக்கிறார்கள் இளம் களம் காணும் கண்கள்!

**பசுமை மண்ணின் பாடங்கள்**

ஆனைமலை, குளத்தூர், வத்தலக்குண்டு, பாலக்கோடு, மோகனூர், பொள்ளாச்சி தெற்கு, சத்தியமங்கலம், சேந்தமங்கலம், தோகைமலை, வாழப்பாடி, உத்தமபாளையம், காவேரிப்பட்டிணம், பென்னாகரம், கபிலர் மலை, அரூர் மற்றும் கம்பம், தமிழ்நாட்டின் பசுமை வயல்களின் அழகு கொண்ட இடங்களில் மாணவர்கள் தங்கியிருந்து விவசாயத்தின் செயல் முறைகளைக் கற்றனர். வெப்பத்தில் வாடும் விவசாயிகளின் உறுதியும், தொழில்முனைவோர்களின் முயற்சியால் வளர்ந்த உற்பத்தி முறைமையும் அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

சிறுதானியங்களைச் சிறப்பாக மாற்றும் துரோணா மில்லட் உணவுகள் ஒரு தொழில்முனைவோரின் பயணம், STUDENT READY-திட்டத்தின் கீழ் தொழிற்சாலை இணைப்பு பயிற்சி, லூக்கா ரீடெய்ல் பிரைவேட் லிமிடெட் - உயிரி உர தொழிலில் ஒரு கொள்கை நோக்குடைய முன்னோடி, தர்மபுரியின் ABR ஸ்டார்ச் வெற்றிக் கதை,தென்னை நார் தொழிலில் உலகளாவிய வர்த்தகத்திற்கு ஒரு பயணம்,பசுமை வழியில் புரட்சியை ஏற்படுத்தும் கிரீன் டெக் பயோ இயற்கை உர நிறுவனம், பொள்ளாச்சி,சேகரிப்பு மையங்கள் மற்றும் வாழை விவசாயிகளின்: கொள்கைப் பார்வை மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு வழிமுறைகள், மரவள்ளியின் மாயாஜாலம்: ஸ்ரீ திருமலைவாசன் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் நிறுவனத்தின் வெற்றிக்

கதை, ஜெய்ராக் நிறுவனம் - விவசாயிகளின் நம்பிக்கை, பசுமைப் புரட்சியின்முன்னோடி !,

SKA டைரி ஃபுட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் ஒரு பார்வை, STUDENT READY திட்டத்தின் கீழ், வாஹின் ஹோம் - தொழிற்சாலைப் பயிற்சி, “மாம்பழ நறுமணத்தில் உலகை கட்டிப்போட்ட கிருஷ்ணகிரி !, மாஃப்ரெஷின் வெற்றிக் கதை”, உலகம் நோக்கும் தர்மபுரியின் பசுமை: மஹா விவசாயப் பொருட்கள் நிறுவனம், விவசாயத்தில் புதிய வழிகாட்டி: கிரிஷி ஆக்ரோ இன்டஸ்ரீஸ் “தஃபார்மொவேட்”, விவசாயத்தில் உயிர்சார் புரட்சியின் முன்னணி: பவன் பயோ டெக் இந்தியா, பிரக்ஜா ஜூஸ் - கம்பம் பழங்களின் இயற்கை வரம், ஆரோக்கிய பானங்களின் வெற்றி கதை போன்ற நிறுவனங்களில் மாணவர்கள் நேரில் சென்று பார்த்து கற்றனர். தானியத்தை விதைக்கிறதிலிருந்து, பாக்கேஜிங் வரை ஒரு விவசாய தயாரிப்பின் முழு சுழற்சி அவர்களின் கண்ணிற்கு தெரிந்தது.

**மாற்றம் கிடைத்த கள அனுபவம்**

ஒரு தயாரிப்பின் தரம் எப்படி பரிசோதிக்கப்படுகிறது? சந்தையில் எவ்வாறு இடம் பிடிக்கிறது? சுற்றுச்சூழலுடன் ஒத்துழைக்கும் தொழில்முறை என்ன? பெண்கள் விவசாய தொழில்களில் எவ்வளவு முக்கிய பங்கு வகிக்கின்றனர்? இவை அனைத்தும் புத்தகங்களில் படிக்கக் கிடைக்கும். ஆனால், இம் மாணவர்கள் அதனை நேரில் பார்த்து கற்று உணர்ந்தனர்.

இந்த நிறுவனங்களின் நடைமுறைகள், மாணவர்களின் சிந்தனையை மாற்றின. விவசாயம் சுமூகமா ஓட வேண்டுமானால், அறிவும் மேலாண்மையும் அவசியம் என்பதை அவர்கள் புரிந்துகொண்டனர். விவசாயம் ஒரு துறையாக அல்லாமல் அது ஒரு சிந்தனை முயற்சியாகவும் உள்ளது.

**நூல் படித்ததோடு நிலம் பார்த்ததும் கூடவே...**

இந்த பயணம், மாணவர்களுக்கு ஒரு கல்லூரிப் பயிலரங்கம் போல அல்லாமல் ஒரு அனுபவத்தின் நாட்குறிப்பாகவும் இருந்தது. அவர்கள் பசியால் உருவான ஒரு தேசத்தின் அடிப்படை துறையை உணர்ந்துகொண்டனர். அதிலும், அந்தத் துறையை மேம்படுத்தும் கனவுகளை தங்கள் உள்ளத்தில் விதைத்தனர்.

வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் இந்த முயற்சி, நூலில் படித்ததை நிலத்தில் உணர வைத்த ஒரு “உணர்வு நூலாக” மாணவ மாணவிகளின் மனதில் பதிந்துவிட்டது.

**ஒரு பார்வை, ஒரு மாற்றம் !**

இக்கட்டுரையில் நம்மால் பார்க்கமுடிவது, இது ஒரு விவசாயப் பயணம் மட்டுமல்ல. இது மாணவர்களின் மனங்களில் விதைக்கப்பட்ட மாற்றத்தின் களப்பதிவு. இது போன்ற பயணங்கள் தான், நம் தேசத்தை உண்மையாக வளர்த்திடும் விதைகளாய் மாறும் !

உழவர் சிந்தனைக் களஞ்சிய குழு

**❋ஆனைமலை, கோவை மாவட்டம்❋**




# துரோணா மில்லட் உணவுகள் ஒரு தொழில்முனைவோரின் பயணம்

**மாணவர்களின் களப்பயணம்**

நாங்கள் வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் நான்காம் ஆண்டு படிக்கும் பி.எஸ்.சி (ஹானர்ஸ்) வேளாண்மை மாணவர்கள், "Student READY Programme" (AEX 401 கிராமப்புற வேளாண் பணி அனுபவம் மற்றும் வேளாண் தொழில் இணைப்பு (0+20) பாடத்தின் ஒரு பகுதியாக துரோணா மில்லட் உணவு தயாரிக்கும் தொழிற்சாலையுடன் தொழில் இணைப்பு ஏற்படுத்தி அனுபவப் பயிற்சியை மேற்கொண்டோம்.

**துரோணா மில்லட் உணவுகளின் தொடக்கம்:**

கடந்த 2012 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட துரோணா மில்லட் உணவு நிறுவனம், சிறுதானிய உணவுத் தயாரிப்பில் தனக்கென தனி முத்திரை பதித்துள்ளது. 2023ஆம் ஆண்டில் துரோணா பிராண்ட் மூலம் குக்கீஸ், மால்ட், மாவு, லட்டு, முறுக்கு, பக்கோடா மற்றும் காராசேவ் போன்ற சிற்றுண்டிகளைத் தயாரிக்கத் தொடங்கி, இன்று பலரது பாராட்டுகளைப் பெற்றுள்ளது.

**தயாரிப்பு முறை:**

தரமும், சுவையும் கலந்த தயாரிப்புகளுக்காக சிறுதானியங்களை 7% ஈரப்பதம் பராமரிக்கப்படும் வகையில் 300 கிலோ/8 மணி நேரத் திறனுடன் செயல்படும் உலர்த்தி மூலம் தயாரிக்கப்படுகின்றன. பின் அதை 'பிராண்டட் லேபிளிங்' மற்றும் 'வெள்ளை லேபிளிங்' முறைகளில் சந்தைப்படுத்தப்படுகின்றன.

**தொழில் உத்திகள்:**

குடும்ப அளவில் வீட்டுத் தயாரிப்பு உணவுகளிலிருந்து ஆரம்பித்து தொழில்முறை உற்பத்தி அளவிற்கு மாறிய இந்நிறுவனம், தரத்தில் சமரசம் இன்றி, புதுமையான உணவுப் பொருட்களை அறிமுகப்படுத்துவது, மாறிவரும் சந்தையைத் திறம்பட சமாளிப்பது மற்றும் சமூக ஊடக விளம்பரம் மூலம் வாடிக்கையாளர்களை ஈர்ப்பது போன்ற பல்வேறு தொழில் உத்திகளைப் பயன்படுத்துகிறது.

**சமூகப் பொறுப்பு:**

தொழிலாளர்களின் உடல் மற்றும் மன நலத்திற்கு முக்கியத்துவம் அளிப்பது, குறிப்பாக பெண்களுக்கு வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துவது போன்ற சமூகப் பொறுப்புகளை இந்நிறுவனம் வெற்றிகரமாக நிறைவேற்றுகிறது.

**மாணவர்களின் அனுபவம்:**

இந்நிறுவனம் உற்பத்திமுறை, நிர்வாகம், சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பர உத்திகள் குறித்த ஆழமான அனுபவத்தை எங்களுக்கு வழங்கியது. துரோணா மில்லட் உணவுகளின் வளர்ச்சியும் புதுமையான அணுகுமுறையும் எங்கள் தொழில்முனைவோர் திறனை மேம்படுத்த உத்வேகமாக அமைந்துள்ளது.

ம. அபிக்ஷ வர்த்தினி, அனகா மோகன்,
ர. காயத்ரி தேவி, பா. கனிகா, ச. மதுமிதா,
ரா. பிரேமா, செ. சரண்யா, செ.ஜெ. ஸ்வேதா,
ஈ. சன்மதி, மு. வர்ஷ்னி.
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி





## பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு

### நெல்:



- பசுங்குத்தி பூச்சி, மஞ்சள் பட்டாம்பூச்சி போன்றவை அதிகம் தாக்கும்.
- இவற்றை கட்டுப்படுத்த வேம்பு எண்ணெய் கரைசல் (5ml/L) தெளிக்கலாம்.
- நீர் தேங்கும் நிலங்களில் கழுகு/நொடி நோய் ஏற்படும். அதைகட்டுப்படுத்த நீர் வடிகால் அமைப்பு அவசியம்.
- ஒத்தவிதமாக ஒதுக்குப் பயிர்கள் (மேரிகோல்டு) பயிர் செய்வதன் மூலம் பூச்சி ஈர்ப்பை குறைக்கலாம்.



# STUDENT READY - திட்டத்தின் கீழ் தொழிற்சாலை இணைப்பு பயிற்சி

***நிறுவனம்: ஹரி உயிரி எரிபொருட்கள், அந்தியூர்***

**"கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு**
**உரிமை உடைத்திவ் வுலகு" - குறள் 578.**

இந்தத் திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் திருமதி. உமாதேவி, MBA, ஹரி உயிரி எரிபொருள் நிறுவனத்தின் மேலாளர், இந்த நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் ப்ரிக்கெட் உற்பத்தியில் உள்ள சவால்களைத் திறம்பட விவரித்தார். விவசாயக் கழிவுகளைச் சுற்றுச்சூழலுக்கு உகந்த ப்ரிக்கெட்டுகளாக மாற்றி, நிலையான எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் அந்நிறுவனத்தின் அர்ப்பணிப்பை அவர் விளக்கினார்.

**நிறுவனத்தின் பின்னணி:**

கடந்த 1997ஆம் ஆண்டு, அந்தியூரில் நிறுவப்பட்ட ஹரி உயிரி எரிபொருள் நிறுவனம், உயிரி எரிபொருள் உற்பத்தியில் முன்னோடியாகத் திகழ்கிறது. இந்நிறுவனம் பாரம்பரிய எரிபொருட்களுக்கு மாற்றாக, சுற்றுச்சூழலுக்கு உகந்த ப்ரிக்கெட்டுகளை உற்பத்தி செய்வதில் தனிக்கவனம் செலுத்துகிறது. விவசாயக் கழிவுகளைப் பயன்படுத்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்குப் பங்களிப்பதே இதன் முதன்மை நோக்கம். மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் ஆரஞ்சு வகை சான்றிதழைப் பெற்று, மிதமான மாசுபாட்டுத் திறனுடன் செயல்படும் இந்நிறுவனம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் முக்கியப் பங்காற்றுகிறது.

**உற்பத்தி செயல்முறை மற்றும் மூலப்பொருட்கள்:**

உள்ளூர் விவசாயத் தொழில்களிலிருந்து பெறப்படும் அரிசி உமி, நிலக்கடலை ஓடுகள், காபி கழிவுகள், மரத்தூள், யூகலிப்டஸ் மரப்பட்டை மற்றும் மக்காச்சோளக்கருது கழிவுகள் போன்ற விவசாய கழிவுகளே ப்ரிக்கெட் உற்பத்திக்கான மூலப்பொருட்களாகும்.

**உற்பத்தி செயல்முறை:**

1. **உலர்த்துதல்**: மூலப்பொருட்களை வெயிலில் உலர்த்தி ஈரப்பதத்தை 10 - 12% ஆகக் குறைத்தல். மழைக்காலங்களில் இயந்திரங்கள் உலர்த்துதலுக்கு பயன்படுத்தப்படுகிறது.
2. **நசுக்குதல்**: உலர்ந்த பொருட்களைச் சிறிய துகள்களாக உடைத்தல்.
3. **கலத்தல்:** நொறுக்கப்பட்ட பொருட்களைச் சமமாக கலத்தல்.
4. **நிரப்புதல்**: கலந்த பொருட்களை ப்ரிக்கெட் இயந்திரத்தின் ஹாப்பரில் செலுத்துதல்.
5. **சுருக்குதல்:** 150°C வெப்பநிலையில், 10 - 20 MPa அழுத்தத்தில் சுருக்குதல்.
6. **வெளியேற்றம்**: ப்ரிக்கெட்டுகளை வெளியேற்றி விற்பனைக்குத் தயார் செய்தல்.

ஒரு நாளைக்கு 10 -13 டன் உற்பத்தித் திறனுடன், ஒரு டன் ப்ரிக்கெட் ரூ. 8500-க்கு விற்கப்படுகிறது. சந்தை நிலவரங்களைப் பொறுத்து, ஒரு டன்னுக்கு ரூ. 500 முதல் ரூ. 1000 வரை லாபம் கிடைக்கிறது.

**சந்தை மற்றும் அரசாங்க ஆதரவு:**

மில்கிமிஸ்ட், பிரீமியர் டெக்ஸ்டைல்ஸ் மற்றும் இந்தியா டையிங் போன்ற நிறுவனங்கள் ஹரி உயிரி எரிபொருளின் முக்கிய வாடிக்கையாளர்கள். பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (PMEGP) கீழ், இயந்திர கொள்முதலுக்கு 30% மானியம் பெற்று இந்நிறுவனம், செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தியுள்ளது.



**பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு**

**பருப்பு வகைகள்:**

- உளுந்து, முங்கு, தோரம் ஆகியவை நுண்ணுயிர் நோய்களுக்கு இடப்படும்.
- விதை மூட்டைகளை பையோ கண்ட்ரோல் கரைசலில் நனையவைக்கவும்.
- பூச்சியை தவிர்க்க பசுமை ஒளி பிடிப்பு வலை, பஞ்சவர்ண பிடிப்பு பயன்படுத்தலாம்.



## ❋ குளத்தூர், சேலம் மாவட்டம் ❋

**சவால்கள்:**

- மூலப்பொருள் கிடைப்பதில் உள்ள சிரமம்.
- ஈரப்பதத்தை கட்டுப்படுத்துவதில் உள்ள சிக்கல்.
- தேவையின்போது ஏற்படும் ஏற்ற இறக்கங்கள்.

**முடிவுரை:**

ஹரி உயிரி எரிபொருள்கள், விவசாயக் கழிவுகளை மதிப்புமிக்க, சுற்றுச்சூழலுக்கு உகந்த ப்ரிக்கெட்டுகளாக மாற்றி, நிலையான எரிசக்தித் தீர்வை வழங்குகிறது.

ஆய்வின் போது, மரவள்ளிக்கிழங்கு கழிவுகள், தேங்காய் உமி மற்றும் கோகோ காய் கழிவுகளைப் பயன்படுத்தி ப்ரிக்கெட் உற்பத்திகான புதிய மூலப்பொருட்களை கண்டறிந்தோம். இது, கழிவு மேலாண்மை மற்றும் நிலையான எரிசக்தி உற்பத்திக்கு உறுதுணையாக இருக்கும்.

**கூடுதல் பரிந்துரைகள்:**

- சுற்றுச்சூழல் தாக்கத்தை அளவீடுகளுடன் விரிவாக விளக்கலாம்.
- உற்பத்தி திறனை மேம்படுத்த புதிய தொழில்நுட்பத் தீர்வுகளை ஆராயலாம்.
- புதிய சந்தைகளை கண்டறிந்து, தயாரிப்புகளைப் பன்முகப்படுத்தலாம்.
- உள்ளூர் விவசாயிகளுக்கு கழிவுகளால் ஏற்படும் சமூக தாக்கத்தைப் பற்றி விளக்கலாம்.
- புதிய மூலப்பொருட்களை ஆய்வு செய்ய ஊக்குவிக்கலாம்.
- சந்தை போட்டியைப் பற்றி விளக்கலாம்.
- சந்தையின் விலை ஏற்ற இறக்கங்களை ஆய்வு செய்யலாம்.

க. சீதா, ர. சுவேதா, தி. ஆப்ரின் ஜூல்ஃபியா,
க. பூமிகா, சி. வினோதிதா, கா. ஹரிணி,
பு. ராஜேஸ்வரி, சோ. நந்தினி,
ச. கேசவர்த்தினி, வெ. ஸ்ரீ ரஞ்சிதா.
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி

### பருவக் கால அட்டவணை (Seasonal Calendar – Tamil Nadu)

| பயிர் | விதைக்கும் காலம் | அறுவடை காலம் |
|---|---|---|
| நெல் - குருவை | ஜூன் - ஜூலை | செப்டம்பர் - அக்டோபர் |
| நெல் - தாளாடி | செப் - அக்டோபர் | ஜனவரி - பிப்ரவரி |
| நெல் - சம்பா | ஆகஸ்ட் - நவம்பர் | பிப்ரவரி - மார்ச் |
| பச்சை பருப்பு | ஜூலை / ஜனவரி | ஆகஸ்ட் / பிப்ரவரி |
| உளுந்து | ஜூலை / ஜனவரி | செப்டம்பர் / பிப்ரவரி |
| தோரம் | ஜூன் / அக்டோபர் | நவம்பர் / மார்ச் |



# லூக்கா ரீடெய்ல் பிரைவேட் லிமிடெட் - உயிரி உர தொழிலில் ஒரு கொள்கை நோக்குடைய முன்னோடி

**முன்னுரை**

கரிம விவசாயத்தின் மேன்மையை உணர்ந்து, சில்லறை விலையில் அனைத்து விவசாய உள்ளீடுகளையும் வழங்கும் நோக்கில், லூக்கா ரீடெய்ல் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் 2015 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. ஆர்கானிக்டியூஸ் என்ற பிராண்டின் கீழ், வீட்டுத் தோட்டக்காரர்கள் முதல் பெரிய நிலக் கிளார்கள் வரை பல்துறையை சார்ந்தவர்களையும் சேர்த்தது இந்த நிறுவனத்தின் வியாபார யுக்தி ஆகும்.

தரமான உயிரி உரங்கள், பயோ ஸ்டிமுலண்ட்ஸ், நுண்ணுயிரி இனாகுலங்கள் ஆகியவற்றை சுத்தமான முறையில் தயாரிப்பதே இந்நிறுவனத்தின் மையக் கொள்கையாகும். அவ்வப்போது நடத்தப்படும் அரசின் மாதிரி சோதனைகளின் உயர் தர மதிப்பீடுகள் இதை உறுதிப்படுத்துகின்றன.

**நிறுவனப் பின்னணி மற்றும் மேலாண்மை**

இந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக திருமதி. ஞானசுந்தரி செயலாற்றுகிறார். அமெரிக்காவில் இயற்கை உரத் துறையில் பணிபுரிந்த கணவரின் பரிந்துரை மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் இந்த நிறுவனம் உருவானது. உயிர் உர தயாரிப்பு, கையாளும் நுட்பங்கள் மற்றும் ஆய்வுகள் ஆகியவை வேதியியலாளர் திருமதி. ராஜேஸ்வரி மற்றும் நுண்ணுயிரியலாளர் திரு. சுபாஷ் ஆகியோரால் மேற்பார்வையிடப்படுகின்றன. இயந்திரம் மற்றும் நிபுணர்களின் ஒருங்கிணைந்த பங்களிப்பு மூலம், தர நிர்ணயங்களை பின்பற்றும் உற்பத்தி முறை நடைமுறையில் உள்ளது.

**நிறுவனம் உருவாக்கும் உயிரி உரங்கள்:**

- அசோஸ்பைரில்லம் பிரேசிலியன்ஸ்
- அசோடோபாக்டர் குரோகோகம்
- ரைசோபியம் இனம்
- பாஸ்போபாக்டீரியா
- பேசிலஸ், சூடோமோனாஸ், பிராங்கியா இனங்கள்
- VAM (மைகோரைஸா)

இவை விவசாய நிலத்தில் நைட்ரஜன், பாஸ்பரஸ், கல்ப சத்துக்கள் போன்றவற்றின் உயிரணுக் கட்டமைப்பை தூண்டுவதற்கான முக்கிய ஊக்கிகள் ஆகும்.

**உற்பத்தி செயல்முறை**

நுண்ணுயிரிகளை தேர்ந்தெடுத்து, குறிப்பிட்ட ஊடகங்களில் வளர்த்துப் பெருக்கி, கடைசியாக கேரியருடன் கலக்கப்பட்டு இவ்உயிரி உரங்கள் தயாரிக்கப்படுகிறது. இவை திட (carrier-based) மற்றும் திரவ வடிவத்தில் தயாரிக்கப்படுகின்றன.

**முக்கிய கட்டங்கள்:**

- **துணை வளர்ப்பு:** தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து பெற்ற தாய் வளர்ப்பை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படுகிறது.
- **கிருமி நீக்கம்:** IPA மற்றும் நீராவி மூலம் கிருமி நீக்கம் செய்யப்படுகிறது.
- **நொதித்தல்:** நிலையான வெப்பநிலை மற்றும் காற்றோட்ட கட்டுப்பாடுகளுடன் இது வளர்க்கப்படுகிறது.

**பயன்பாடு மற்றும் பரிந்துரை**

| பயன்பாடு | பரிந்துரை |
|---|---|
| விதை நேர்த்தி | 05-10 மில்லி / கிலோ விதை |
| நாற்று நனைத்தல் | 100-200 மில்லி / 20-30 லிட்டர் தண்ணீர் - 30 நிமிடங்கள் |
| வயலில் மண் இடுதல் | 500-750 மில்லி + 30-50 கிலோ இயற்கை உரம் |

**தரநிலைகள் மற்றும் கால அளவுகள்:**

| அளவீடு | திரவ உரம் | திட உரம் |
|---|---|---|
| செல் எண்ணிக்கை | $1X10^8$ செல்/ மிலி | $1X10^5$ செல்/ கிராம் |
| pH | 5.5 - 7.5 | 6.5 - 7.5 |
| ஈரப்பதம் | - | 20% - 60% |
| ஆயுள் காலம் | 6 மாதங்கள் | 12 மாதங்கள் |

**கொள்கை நோக்கு மற்றும் சமூக தாக்கம்**

லூக்கா ரீடெய்ல் நிறுவனம், தமிழகத்தில் கரிம வேளாண்மையை ஊக்குவிக்கின்றது. வீட்டுத் தோட்டக்காரர்களுக்கான சிறு அளவு முதல் பெருநில விவசாயிகளுக்கான மொத்த உற்பத்தி வரை, இந்நிறுவனம் பணி நெறியில் தரத்தையும் மற்றும் சுற்றுச்சூழல் கவனத்தையும், முக்கியமாகக் கருதுகின்றனர். இந்த உற்பத்தி முறைகள், நிலையான வேளாண் கொள்கைகளின் ஒரு பகுதியாக அரசின் ஆதரவைப் பெறும் வகையில் உள்ளது. இந்தியாவில் உயிரி உரம் உற்பத்திக்கான மாநிலக் கொள்கைகளுடனும், பரம்பரகாட் கிருஷி விகாஸ் யோஜனா (Paramparagat Krishi Vikas Yojana) போன்ற தேசியத் திட்டங்களுடனும் இணைந்திருக்கின்றது.

**முடிவுரை**

லூக்கா ரீடெய்ல் பிரைவேட் லிமிடெட் தொழில்முறையான, தரநிலைகளை கடைப்பிடிக்கும் மற்றும் புதுமைகளை ஏற்றுக்கொள்ளும் நிறுவனமாக செயல்படுகிறது. இது சுற்றுச்சூழலுக்கு உறுதுணையாகவும், சிறு மற்றும் பெரு விவசாயிகளை, இணைக்கும் ஒரு பாலமாகவும் திகழ்கிறது. அறம் + அறிவியல் = நிலையான விவசாயம் என்பதை வணிகவழியில் சொல்கிறது லூக்கா ரீடெய்ல்.

செ. அம்பிகா, டெல்லா சிபி,
ஜோ. ஜெர்லின் ஜெனிபர், யோ. கிருத்திகா,
சு. பிரகதி, ச. சனோபியா, வி. ஷர்மி,
அ. சுகன்யா, பா. திருனிதா.
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி



# தர்மபுரியின் ABR ஸ்டார்ச் வெற்றிக் கதை

**முன்னுரை:**

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு தாலுக்கா, கடமடையில், 2009 ஆம் ஆண்டு திரு. ரவி மற்றும் திருமதி. புஷ்பராணி ரவி ஆகியோரால் ABR ஸ்டார்ச் நிறுவனம் தொடங்கப்பட்டது. மரவள்ளிக்கிழங்கை ஸ்டார்ச் தூளாக மாற்றுவதே இவர்களின் முக்கிய தொழில். ஒரு சிறிய நிறுவனமாகத் தொடங்கிய நிறுவனம், இன்று வெற்றிகரமான பெரு நிறுவனமாக வளர்ந்துள்ளது. இன்று 15 ஏக்கர் பரப்பளவில், நவீன இயந்திரங்களுடன், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் ஒரு முன்மாதிரி நிறுவனமாகத் திகழ்கிறது.

**பின்னணி:**

பாலக்கோடு பகுதியில் அதிகமாக விளையும் மரவள்ளிக்கிழங்கை மதிப்புக்கூட்டல் செய்து, விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தில் 2006 ஆம் ஆண்டு இந்நிறுவனம் தொடங்கப்பட்டது. காலப்போக்கில், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, தொழிலை மேம்படுத்தினார் திரு. ரவி.

**சவால்களும் தீர்வுகளும்:**

- **தொழிலாளர் பற்றாக்குறை:** வடமாநில தொழிலாளர்களுடன் ஒப்பந்தம் செய்து, இப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டனர்.
- **கழிவுநீர் மேலாண்மை:** அதிநவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்து, சுற்றுச்சூழலைப் பாதுகாத்தனர்.
- **மின்சாரச் சிக்கனம்:** கழிவுநீரிலிருந்து மீத்தேன் வாயுவை உற்பத்தி செய்து, மின்சாரத் தேவையை குறைத்தனர்.
- **சந்தைப்படுத்தல்:** நீண்ட கால ஒப்பந்தங்கள் மூலம், நிலையான சந்தையை உருவாக்கினர்.

## ❋ பாலக்கோடு, தர்மபுரி மாவட்டம் ❋

**நோக்கம்:**

- விவசாயிகளின் வளர்ச்சி மூலம் முன்னேற்றம் காண்பது.
- சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, தரமான பொருட்களை வழங்குவது.
- தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது

**செயலாக்கம்:**

மூலப்பொருட்கள் இறக்கப்படுகின்றன

↓

சுத்தம் செய்தல் - வெட்டுதல்

↓

கிழங்குகளை கழுவுதல்

↓

கிரைண்டிங் - கிரேடிங்

↓

உலர்த்துதல்

↓

மாவு பேக்கிங்

↓

சந்தைப்படுத்தல்

**நிறுவனத்தின் பார்வை:**

விவசாயிகளின் விவசாயப் பொருட்களை மதிப்புக் கூட்டல் மூலம் புதுமையான தயாரிப்புகளை உருவாக்கி தரமான முன்னணி சப்ளையர் ஆக வேண்டும் என்பதே எங்கள் பார்வை.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு கொள்கை:**

பாதுகாப்பான மற்றும் சுத்தமான நீர், காற்று, பூமி மற்றும் ஆற்றல் வளங்களை மேம்படுத்த முயற்சி செய்யுங்கள், இது நமது வளாகத்திலும் சுற்றுப்புறத்திலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான அனைத்து சட்டப்பூர்வ விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் தானாக இணங்க வழிவகுக்கும்.

**தரக் கொள்கை:**

முடிவில் வாடிக்கையாளர்கள், பூஜ்ஜிய குறைபாடுகளை அடைந்து சர்வதேச தரத்தின் தயாரிப்புகளை உற்பத்தி செய்ய தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். புதுமை, செயல்முறை மேம்பாடு மற்றும் தரத்தில் சமரசமற்ற அணுகுமுறையை கடைபிடித்து வாடிக்கையாளர்களை மகிழ்விக்கவும், வாழ்க்கைத் தரத்தை முறையாகக் கருதுவதற்கும் தேவையான பயிற்சியை ஊழியர்களுக்கு அளிக்கப்படுகிறது.

**தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கொள்கை:**

உலகத் தரம் வாய்ந்த ஸ்டார்ச் நிறுவனமாக மாற வேண்டும் என்ற நோக்கத்தில் முறையான கட்டுப்பாடுகள் மூலம் பணியாளர்கள் மற்றும்

ஒப்பந்ததாரர்களிடையே ஏற்படும் அபாயங்கள், காயங்களைத் தடுப்பது மற்றும் நோய்களைத் தவிர்ப்பதற்கான முன்மாதிரியான ஏற்பாடுகளை நிர்வாகம் செய்து கொண்டிருக்கிறது.

**முடிவுரை:**

சவால்களைத் தாண்டி, நவீன தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் மூலம் ABR ஸ்டார்ச் வெற்றி பெற்றுள்ளது. விவசாயிகளின் முன்னேற்றமே தங்கள் முன்னேற்றம் என்ற கொள்கையுடன், இந்நிறுவனம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

சீ. தர்மராஜ், ர. சாரதி, க. ராஜ் குமார்,
பா. கவின் பிரசாந்த், ச. மோகண்குமார்,
க. நிவாஸ், ச. விக்னேஷ்வரன்,
சு. ஹரீஷ், இரா.ஆகாஷ்.
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி

## உயர்தர விதைத் தேர்வுக்கு

### பரிந்துரை செய்யப்படும் நெல் மற்றும் பருப்பு வகைகள்

| வகை | சிறப்பு | கால அளவு |
|---|---|---|
| ADT 43 | சன்ன இரகம் | 110 நாள் |
| CO 51 | குறைந்த நீர்ப்பாசனத்திற்கு ஏற்றது | 105 நாள் |
| CR 1009 | அதிக விளைச்சல் | 135-140 நாள் |

**பருப்புகள்:**

| பயிர் | பரிந்துரை வகை | கால அளவு |
|---|---|---|
| பாசிப்பருப்பு | VBN 3, CO 6 | 65-70 நாள் |
| உளுந்து | VBN 8, T9 | 70-80 நாள் |
| துவரை | VBN 2, CO 6 | 150-180 நாள் |

- சான்று பெற்ற விதைகளை மட்டுமே பயன்படுத்தவும் (Certified Seeds)
- விதைகள் முளைக்கும் தன்மை 80% மேல் இருக்க வேண்டும்.

**⁕ மோகனூர், நாமக்கல் மாவட்டம் ⁕**



# தென்னை நார் தொழிலில் உலகளாவிய வர்த்தகத்திற்கு ஒரு பயணம்

பிப்ரவரி 12, 2011 அன்று நிறுவப்பட்ட இந்த நிறுவனம், தேங்காய் நார் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களை தயாரிப்பதில் முன்னணியில் உள்ளது. நாங்கள் அந்த நிறுவன உரிமையாளர்கள் திரு. நல்லசிவம் மற்றும் திரு. தனசேகரை சந்தித்தோம். அவர்கள் நமக்கு தொழிலின் முக்கிய செயல்முறைகள் குறித்து விரிவாக விளக்கினர்.

இந்நிறுவனம் 40 ஏக்கர் பரப்பளவில் இயங்குகிறது. இதில் 35 ஏக்கர் தென்னை தோட்டம் மற்றும் 5 ஏக்கர் தொழிற்சாலை பகுதி ஆகும். தேவையான மூலப்பொருட்களில் பெரும்பான்மையானவை அவர்களின் சொந்த பண்ணையிலிருந்தே பெறப்படுகிறது; மீதமுள்ளவை அருகிலுள்ள விவசாயிகளிடமிருந்து குத்தகைக்கு எடுக்கப்படுகிறது.

**தயாரிக்கப்படும் முக்கிய பொருட்கள்:**

தேங்காய் நார் (Coir Fiber)

கோகோ பீட் பிளாக் (Coco Peat Block)

இந்தத் தொழிலுக்காக தினமும் சுமார் 1 லட்சம் தேங்காய்கள் பயன்படுகின்றன. தொழிற்சாலை, பண்ணை மற்றும் அலுவலகங்களில் சேர்த்து 200 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

**தேங்காய் நார்: பாரம்பரியம் மற்றும் தொழில்நுட்பத்தின் சந்திப்பு**

தென்னை நார் தொழில், வெப்பமண்டல நாடுகளில் குறிப்பாக இந்தியாவில் பழமையானதும் முக்கியத்துவமிக்கதுமான தொரு தொழிலாகும். தேங்காய் மட்டையிலிருந்து எடுக்கப்படும் இயற்கை நார், பல்வேறு பயனுள்ள பொருட்களை தயாரிக்கப் பயன்படுகிறது. இதில் கயிறுகள், பாய்கள், தூரிகைகள், மெத்தைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற சாதனங்கள் அடங்கும்.

இந்தத் தொழில் கிராமப்புற வேலைவாய்ப்பு, ஏற்றுமதி வருமானம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**தயாரிப்பு செயல்முறை ஒரு பார்வை:**

1. **மட்டைகளை ஊற வைத்தல்:** தேங்காய் மட்டைகள் நீரில் நீண்ட நாட்கள் ஊற வைக்கப்படுகின்றன.
2. **நார் பிரித்தெடுத்தல்:** மென்மையாகிய மட்டைகள் மின்னியந்திரங்கள் மூலம் அடித்து நார் பிரிக்கப்படுகின்றன.
3. **உலர்த்தல் மற்றும் நூற்பு:** பிரித்த நார் உலர்த்தப்பட்டு பின்னலுக்குத் தயார் செய்யப்படுகிறது.
4. **சாயமிடுதல் மற்றும் நெய்தல்:** தயாரான நூல்கள், பாய்கள், கம்பளங்கள் போன்றவைகளாக மாற்றப்படுகின்றன.

**பயன்பாடுகள்:**

- **தொழில்துறையில்:** தென்னை நார் கயிறுகள், பேக்கேஜிங் மற்றும் கப்பல் தொழில்களில் பிரபலமானவை. அவை மக்கும் தன்மை கொண்டதால் சுற்றுச்சூழலுக்கு தகுந்தவாறு அமைகின்றன.
- **உணவகங்கள், வீடுகள், அலுவலகங்கள்:** நார் பாய்கள் மற்றும் கம்பளங்கள் அழகு, உறுதி மற்றும் வழுக்கு எதிர்ப்பு தன்மையால் வரவேற்கப்படுகின்றன.
- **மெத்தைகள்:** உறுதி மற்றும் சுவாசிக்கும் தன்மை கொண்டவை. முதுகுத் தளர்வை தவிர்த்து பல எலும்பியல் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கின்றன.
- **விவசாயம்:** காயர் பித் மற்றும் பிளாக்குகள் தாவர வளர்ச்சியை ஊக்குவிக்கும் வளர்ப்பு ஊடகமாகப் பயன்படுகின்றன. நார் தழைக்கூடம் வெப்பத்திலிருந்து தாவரங்களை பாதுகாக்கிறது.

**உலகளாவிய வர்த்தகம் மற்றும் சமூக தாக்கம்**

இந்தியாவிலிருந்து 100க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு, குறிப்பாக அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு இந்த நார் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தியா, இந்தத் துறையில் உலக அளவில் முன்னணியில் உள்ளது.

இந்தத் தொழில்துறை, 7 லட்சத்துக்கும் அதிகமானோர் வேலை வாய்ப்பைப் பெற உதவுகிறது. சுய உதவிக் குழுக்கள் (SHGs) மூலம் பெண்களின் வாழ்வில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

2020 முதல் 2024 வரை, இந்தியாவின் தென்னை நார் ஏற்றுமதி 16% அதிகரித்துள்ளது. இது உலகளாவிய தேவையின் விரிவை எடுத்துக்காட்டுகிறது.

**முடிவுரை:**

இந்த தென்னை நார்தொழில், தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் இணைந்து, இன்று உலக சந்தையிலும் சமூக வாழ்வியலிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் அளவிற்கு வளர்ந்துள்ளது. தென்னை நார் என்பது இயற்கையின் ஒரு பரிசாக, இந்தியாவின் சுற்றுச்சூழல், பொருளாதாரம் மற்றும் சமூக முன்னேற்றத்தில் சிறப்பான பங்களிப்பைச் செய்து வருகின்றது.

சே. நிவேதிதா, அகிலா ராஜீவ், ம.வெ. ஹர்னி,
பா. ரூபி, கு. தாரணி, மு. தீப்திகா, பா. யுவஸ்ரீ,
பு. ஷப்னா ஃபர்சானா, மு. ஸ்ரீத்திகா,
ஆ.மோ. கிருபா ஹரிணி.
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி



# பசுமை வழியில் புரட்சியை ஏற்படுத்தும் கிரீன் டெக் பயோ இயற்கை உர நிறுவனம், பொள்ளாச்சி

**தொடக்கமும் நோக்கமும்**

2006ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கிரீன் டெக் பயோ, தமிழ்நாட்டின் பொள்ளாச்சியில் இயற்கை உரங்களை உற்பத்தி செய்ய சான்றளிக்கப்பட்ட நிறுவனம் ஆகும். விவசாயத்தின் முழுமையான மதிப்பு சங்கிலியை மனதில் கொண்டு இயங்கும் இந்த நிறுவனம், பயிர்கள் மற்றும் மண் புத்துணர்ச்சிக்கான பலவகை உயிரி தீர்வுகளை உருவாக்கி வருகிறது. காய்கறிகள், பழங்கள், பூக்கள் உள்ளிட்ட பயிர்களுக்கு ஏற்ற வகையில் உருவாக்கப்படும் இத்தயாரிப்புகள், விவசாயிகளுக்கான நன்மைகளை அதிகரிப்பது மட்டுமல்லாமல், சுற்றுச்சூழலுக்கும் பங்களிக்கின்றன.

**வரலாறும் நிறுவனத்தின் ஆதாரமும்**

இந்த நிறுவனத்தின் நிறுவனர் திரு ஹரிதாஸ், புகழ்பெற்ற இயற்கை விவசாயி திரு. நம்மாழ்வார் அவர்களின் புதல்வர். ஆரம்பகாலத்தில், தந்தையார் வீட்டில் உற்பத்தி செய்த இயற்கை உரங்களை தனது பண்ணையில் பயன்படுத்தினர். அதன் நன்மைகளை பார்த்த அண்டை விவசாயிகளும் அதைத் அவர்களிடம் கேட்டு பயன்படுத்த ஆரம்பித்தனர். இதுதான் திரு ஹரிதாஸ் அவர்களை, ஒரு முழுமையான பசுமை தொழில்நுட்ப நிறுவனமாக கிரீன் டெக் பயோவை நிறுவ தூண்டியது.

இந்நிறுவனத்தின் நோக்கம் நச்சுத்தன்மையற்ற, இயற்கை உள்ளீடுகளிலிருந்து தயாரிக்கப்படும் உரங்களை வழங்குதல், இயற்கை விவசாய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் உலகளாவிய விவசாய சமுதாயத்தில் கரிமப் புரட்சியை உருவாக்குதல் ஆகும்.

**விவசாயிகளுக்கான ஆலோசனைகளும் தொழில் சேவைகளும்**

விவசாயிகளுக்கு 24/7 ஆலோசனை சேவையை வழங்கும் இந்த நிறுவனம், உரங்களின் பயன்பாடு மற்றும் பூச்சிக்கொல்லி மேலாண்மை குறித்த சந்தேகங்களுக்கு நேரடி பதில்கள் அளிக்கிறது. சோதனை உரங்களை பயன்படுத்திய பிறகு மூன்று மாதங்களில் முதற்கட்ட விளைவுகள் காணக்கூடியதாகவும், ஒரு ஆண்டிற்குள் அறியத்தக்க மாற்றங்களைத் தருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

**தொழிற்சாலையும் ஆராய்ச்சி ஆய்வுகூடமும்**

கிரீன் டெக் பயோவின் அனைத்து தயாரிப்புகளும் தனி தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றன. தரக்கட்டுப்பாட்டு அலகுகளை ஆய்வுக்கூடத்தில் சோதிக்கப்பட்ட பின் சந்தைக்கு அனுப்பப்படுகிறது. IndiaMART, TradeIndia, JustDial போன்ற தளங்களின் மூலம் ஆன்லைனிலும், ஆஃப்லைனிலும் விற்பனை நடைபெறுகிறது.

**புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் நிலைத்தன்மை**

நிலைத்த விவசாயத்திற்கு உறுதியாக நின்றிருக்கும் இந்நிறுவனம், உயிர் உரங்களில் புதுமையான தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகளில் தொடர்ந்து முதலீடு செய்கிறது. இரசாயன பயன்பாட்டை குறைத்து, மண் சுழற்சி, மண் சுகாதாரம், மற்றும் பயிர் மகசூலுக்கு உகந்த சூழலை உருவாக்குவதற்கான பல்வேறு கரிம நடைமுறைகளை கடைப்பிடிக்கிறது. மேலும், விவசாயிகளுக்கும், உள்ளூர் சமூகங்களுக்கும் பயிற்சி மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

**தயாரிப்பு வரிசை (Product Portfolio)**



கிரீன் டெக் பயோ நிறுவனம் கீழ் கொடுக்கப்பட்டுள்ள பலவகை கரிம உரங்கள் மற்றும் உயிர் தொழில்நுட்ப தயாரிப்புகளை வழங்குகிறது:

- விக்டா பிளஸ், வெஜ் காம்போ, வாழைப்பழ ஸ்பெஷல், மண் ரகசியம், ஹரிமா 6 போன்ற பல பயிர்களுக்கு ஏற்ற இயற்கை உரங்கள்
- தாவர வளர்ச்சி, வேர் வலிமை மற்றும் மகசூல் அதிகரிப்பில் உதவும் ஹ்யூமிக் + கடற்பாசி + ஃபுல்விக் + அமினோ துகள்கள்.
- 4 ஜி துகள்கள் – NPK, ஹ்யூமிக் மற்றும் கடற்பாசி கலவையுடன், பயிர்களின் வளர்ச்சிக்கும் மகசூலுக்கும் சிறந்த ஊக்கமாக அமைகிறது.
- பயோ ஜெல், கடற்பாசி ஜெல் ஊட்டச்சத்து அளிப்பதற்கும் தாவர ஆரோக்கியத்தையும் நிலைத்தன்மையையும் மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டவை.
- ஆசிட் கிரானுல் / பவுடர் மண்ணின் அளவை சீராக்கும் தன்மையுடையது.
- ஹ்யூமிக் திரவம் ஊட்டச்சத்து உறிஞ்சுதலுக்கு உதவுகிறது.

**முடிவுரை**

கிரீன் டெக் பயோ, பாரம்பரியத்தையும் நவீனத் தொழில்நுட்பத்தையும் கலந்த ஒரு முன்னோடியான நிறுவனம். இந்திய விவசாயத்தில் நிலைத்த வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு இயங்கும் இந்நிறுவனம் தரம், புதுமை, சமூகத்தின் நலன் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் விவசாயி நலனிலும் மையம் கொண்ட ஒரு பசுமை புரட்சியை உருவாக்கி வருகிறது.

மா. சுஜிதா, வே. ஷவிதா ஸ்ரீ,
வெ.மோ. அம்ருதா, க. வைஷ்ணவி,
த. ஜெய் கிருத்திகா, வே. லாவண்யா,
செ. இலக்கியா, வீ. சாந்தினி, ந. பிரேமா
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி

# சேகரிப்பு மையங்கள் மற்றும் வாழை விவசாயிகளின்: கொள்கைப் பார்வை மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு வழிமுறைகள்

**முன்னுரை:**

விவசாயம் என்பது இந்தியாவின் பொருளாதாரத்தில் முதன்மையான துறையாகும். அதில் முக்கிய பங்கு வகிக்கும் வேளாண் சந்தை கட்டமைப்புகள், குறிப்பாக "சேகரிப்பு மையங்கள்" (Collection Centres), நவீன உணவுப் பொருள் விநியோகத் தொடர்களில் பிரதானமாக உள்ளன. இக்கட்டுரை, சத்தியமங்கலத்தை மையமாகக் கொண்ட, வாழை விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டில் சேகரிப்பு மையங்கள் எந்த அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை கொள்கைப் பார்வையில் ஆராய்கிறது.

**பின்னணி மற்றும் கொள்கையின் நோக்கம்**

வேளாண் உற்பத்தியாளர்களுக்கு சந்தை அணுகல்முறையில் உள்ள குறைபாடுகளை சரிசெய்து, இடைத்தரகர்களை நீக்கி, நேரடி விற்பனையை ஊக்குவிக்கவே இந்த சேகரிப்பு மையங்கள் உருவாக்கப்பட்டன. இது உள்நாட்டு வேளாண் சந்தையின் வலுவாக்கம், மாறி வரும் நுகர்வோர் தேவைகளுக்கு பதிலளிக்கக் கூடிய விநியோக ஒழுங்குமுறை, மற்றும் விவசாய வருமானத்தை உயர்த்தும் தேசியக் கொள்கைப் போக்குகளுடன் இணைந்துள்ளது.

**பணி செய்கையின் அமைப்பு:**

சேகரிப்பு மையங்கள் விவசாயிகளிடமிருந்து விவசாயப் பொருட்களை நேரடியாக வாங்குகின்றன. சத்தியமங்கலத்தில், வாழை வகைகளான பூவன், ஏலக்கி, நேந்திரம் உள்ளிட்ட பருவ விளைபொருட்கள் கையால் தரம் பிரிக்கப்படுகின்றன. தரமுள்ள விளைபொருட்கள் பிரீமியம் விலையில் விற்பனை செய்யப்படுகின்றன; விற்பனைக்கு விருப்பமில்லாமல் இருக்கக்கூடியவை விவசாயிகளிடம் திருப்பி வழங்கப்படுகின்றன, அல்லது பதப்படுத்துதலுக்குப் பயன்படுத்தபடுகிறது.

**பிரதான சவால்கள்**

**1.தொலைவு மற்றும் போக்குவரத்து செலவுகள்**

சேகரிப்பு மையங்கள் விவசாய நிலங்களுக்கு தொலைவில் உள்ளதன் காரணமாக, விவசாயிகள் அதனைத் தவிர்த்து அருகிலுள்ள இடைத்தரகர்களிடம் விற்பனை செய்கின்றனர்.

**2. உடனடி பண தேவை**

அறுவடைக்கு பின்பு உடனடியாக பணம் தேவைப்படும் விவசாயிகள், இந்த வசதியை தவிர்த்து குறைந்த விலைக்கே தங்கள் விளைபொருட்களை விற்பதற்கும் தயாராக இருக்கிறார்கள்.

**3. தர நிராகரிப்பு பற்றிய அச்சம்**

"நம் விளைபொருள் நிராகரிக்கப் படுவதாக இருந்தால்?" என்ன பயம், விவசாயிகளை சேகரிப்பு மையங்களை நோக்கிச் செல்லாமல் தடுக்கும் முக்கிய காரணியாக அமைந்துள்ளது.

**நவீன உத்திகள் மற்றும் சிறந்த நடைமுறைகள்**

- **நேரடி சந்தை அணுகல்:** மையங்களில் வாங்குபவர்கள் நேரில் விவசாய நிலங்களுக்கு சென்று, தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை விவசாயிகளுக்கு விளக்குகிறார்கள்.
- **பல பயிர் வகைகள் சாகுபடி பரிந்துரை:** ஒரே நிலத்தில் பல வகை வாழைப் பழங்களை ஒரே நேரத்தில் வளர்த்து, மையத்திற்கு தொடர்ந்து விநியோகம் செய்யப்படுகிறது.
- **விலை நிலைத்தன்மை மற்றும் வருமான உயர்வு:** திரு. வாசுதேவன் என்ற விவசாயியின் நிதி தரவுகளின்படி, சேகரிப்பு மையத்தின் வாயிலாக, ஒரு வாழைத் செடிக்கு சராசரியாக 253 ரூபாய் லாபம் ஈட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

**முன்னேற்றத் தீர்வுகள்**

- **நிதி வசதிகள்:** உடனடி பண தேவையை தீர்க்க மைக்ரோ கிரெடிட் வசதிகள் அறிமுகப்படுத்தப்படலாம்.
- **மையங்களை நெருக்கமாக நிறுவல்:** அதிக விளைச்சல் பகுதிகளில் கூடுதலாக மையங்களை அமைத்தல்.
- **தர நிராகரிப்பு துல்லியமான தகவல் பகிர்வு:** விற்பனையாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே திறந்த தகவல் பகிர்வு நிலைமை உருவாக்குதல்.

**முடிவுரை**

வேளாண் உற்பத்தியாளர்களின் சந்தை அணுகலை மேம்படுத்துவதில் சேகரிப்பு மையங்கள் ஒரு முக்கியக் கொள்கை கருவியாக உள்ளன. குறிப்பாக வாழைச் சாகுபடியில், இது விளைபொருட்களின் தரத்தை உயர்த்துவதோடு, விவசாயின் வருமானத்தையும் அதிகரிக்கிறது. ஆயினும், நீடித்த தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமானால், பொது கொள்கைகள் விவசாயிகளின் நிலையான நம்பிக்கை மற்றும் ஆற்றல்மிக்க அமைப்புகளையும் உருவாக்க வேண்டும்.

மா. ச. பிரியதர்ஷினி, க. பா. சௌமியா,
தே. வாசவி, பா. அர்ச்சனா,
கா.ஆ. ஞான சூர்யா, ஜெ. மகாலட்சுமி,
மா. அபிநேஸ்ரீ, கு. கரோலின் மேரி,
ரா. சதா ஸ்ரீ, கு. சுசி நந்தனா.
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி




**நாட்டு உரங்கள் (பசுமை உரம், பஞ்சகவ்யம்) பயிருக்கு உயிரூட்டும் சக்தி அளிக்கிறது.**




# மரவள்ளியின் மாயாஜாலம்: ஸ்ரீ திருமலைவாசன் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் நிறுவனத்தின் வெற்றிக் கதை

**நாமக்கல் மண்ணின் பொற்கொடை**

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் அருகே வெள்ளக்கணுவையில் அமைந்திருக்கும் ஸ்ரீ திருமலைவாசன் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் தயாரிப்பு நிறுவனம், மரவள்ளிக் கிழங்கின் மகத்துவத்தை உலகிற்கு உணர்த்தும் ஒரு சான்றாக விளங்குகிறது. 2009ஆம் ஆண்டு திரு. கே.பி. முருகன் அவர்களின் தொலைநோக்குப் பார்வையால் நிறுவப்பட்ட இந்த நிறுவனம், குறுகிய காலத்தில் இப்பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றும் ஒரு தொழிலாக உருவெடுத்துள்ளது. 50 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இதன் பிரதான கிளை, நாமக்கல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் எட்டு கிளைகளைக் கொண்டு மரவள்ளியின் பொன்னான விளைச்சல் பலனை மக்களுக்கு கொண்டு செல்கிறது. பேளுக்குறிச்சி, செல்லப்பம்பட்டி, வெள்ளாளப்பட்டி, புதுப்பட்டி, நாமகிரிப்பேட்டை, ஒடுவன்குறிச்சி, அரியகவுண்டம்பட்டி மற்றும் தொப்பப்பட்டி (இரண்டு கிளைகள்) ஆகிய இடங்களில் உள்ள கிளைகள், நிறுவனத்தின் விரிவான செயல்பாடுகளுக்கு சான்றாக விளங்குகின்றன.

**விவசாயிகளின் உழைப்பும் நிறுவனத்தின் அர்ப்பணிப்பும்**

ஸ்ரீ திருமலைவாசன் நிறுவனத்தின் வெற்றிக்கு அடிப்படையாக விளங்குவது, தரமான மூலப்பொருட்களின் சேகரிப்பு. உள்ளூர் விவசாயிகள் மற்றும் இடைத்தரகர்களிடமிருந்து மரவள்ளிக் கிழங்குகள் வாங்கப்படுகின்றன. ஒரு நாளைக்கு சுமார் 2500 மூட்டைகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு மூட்டைலும் 75 கிலோ எடையுள்ள மரவள்ளிக் கிழங்குகள், சுமார் ரூ. 550 முதல் 600 வரையிலான விலையில் வாங்கப்படுகின்றன. விவசாயிகளின் கடின உழைப்பிற்கேற்ப, நிறுவனத்தின் நேர்மையான கொள்முதல் முறையும், தரமான தயாரிப்புகளும் அடித்தளமாக அமைகின்றன. ஸ்டார்ச் பதப்படுத்தும்

பணிகள் ஆண்டிற்கு நான்கு மாதங்கள் நடைபெறுகின்றன. மீதமுள்ள இரண்டு மாதங்கள் இயந்திரங்களின் பராமரிப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்படுகின்றன.

**உற்பத்தி செயல்முறையின் நுட்பங்கள்**



ஸ்ரீ திருமலைவாசன் நிறுவனத்தின் உற்பத்தி செயல்முறை, பாரம்பரிய முறைகளையும் நவீன தொழில்நுட்பத்தையும் இணைத்து உருவாக்கப்பட்ட ஒரு கலவையாகும். மரவள்ளிக் கிழங்குகளை எடைபோட்டு இறக்குவதில் தொடங்கும் இந்த பயணம், மணலை நீக்கி கழுவுதல், சமமான துண்டுகளாக வெட்டுதல், ராஸ்பர் மூலம் நசுக்குதல், தேவையற்ற மஞ்சள் நிற அழுக்குகளை வடிகட்டுதல் என பல நிலைகளை கடந்து செல்கிறது. ஸ்டார்ச்சை பிரித்தெடுக்க அதிநவீன மையவிலக்கு (Centrifuge) இயந்திரங்கள் பயன்படுத்தப் படுகின்றன. மையவிலக்கால் பிரிக்கப்படும் ஜவ்வரிசி மற்றும் மற்ற பொருள்கள், விலங்கு தீவனமாகவும் உணவு சேர்க்கையாகவும் பயன்படுத்தப்படுகிறது. கழிவு திரவம் கூட வீணாக்கபடாமல் மீண்டும் கழுவப்பட்டு, உலர்த்தப்பட்டு உபரி கழிவுப் பொருளாக மாற்றப்படுகிறது.

**பசுமை ஆற்றலின் முன்னோடி: கழிவுநீரிலிருந்து மின்சாரம் வரை**

ஸ்ரீ திருமலைவாசன் நிறுவனத்தின் மற்றொரு சிறப்பம்சம், அதன் ஆற்றல் திறன். மரவள்ளிக் கிழங்கு கழிவுநீரை உயிரிவாயு உற்பத்திக்கு பயன்படுத்தி, இயந்திரங்களுக்கு தேவையான சக்தியை பெறுகிறது. இதன் மூலம், மின்சார செலவுகள் கணிசமாக குறைக்கப் படுகின்றன. சுமார் 300kW மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இந்த முறை, நிறுவனத்தின் பசுமை ஆற்றல் நோக்கத்திற்கு சான்றாக விளங்குகிறது.

**ஸ்டார்ச் பதப்படுத்தலும் பேக்கேஜிங்கும்: தரமும் பாதுகாப்பும் முதன்மை**

ஸ்டார்ச் பதப்படுத்துதல் மற்றும் பேக்கேஜிங் செயல்முறையில், தரமும் பாதுகாப்பும் முதன்மை பெறுகின்றன. ஸ்டார்ச் பெரிய தொட்டிகளில் சேமிக்கப்பட்டு பின்னர், கருப்பு அழுக்குகளை அகற்றி கழுவப்பட்டு, வாக்கர் இயந்திரத்தைப் பயன்படுத்தி நிலைபடுத்தப்படுகிறது. பின் அதிர்வு இயக்கம் மூலம் ஸ்டார்ச் முத்துக்களாக மாற்றப்பட்டு, சூடாக்கப்பட்டு, குளிர்விக்கப்பட்டு, 56 மணி நேரம் உலர்த்தப்படுகிறது. இறுதியாக, எடைபோட்டு சீல் செய்யப்பட்டு பைகளில் சேமிக்கப்படுகின்றன. இந்த நவீன பேக்கேஜிங் முறை, ஸ்டார்ச்சின் தரத்தை பாதுகாப்பதோடு, அதன் ஆயுளையும் அதிகரிக்கிறது.



**இயற்கை வேளாண்மை சார்ந்த முறைகளை மெல்ல மெல்ல அமல்படுத்துதல் நீடித்த பயனை தரும்.**

## ❋ சேந்தமங்கலம், நாமக்கல் மாவட்டம் ❋

**கல்விப் பயணமும் நன்றியறிதலும்:**

ஸ்ரீ திருமலைவாசன் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் தயாரிப்பு நிறுவனத்தைப் பார்வையிட்டது, எங்களுக்கு ஒரு அறிவூட்டும் அனுபவமாக அமைந்தது. இந்த உற்பத்தி முறையின் மூலம், உள்ளூர் பொருளாதாரம் மற்றும் கலாச்சாரத்தைப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. இதற்காக வாணவராயர் வேளாண்மைக் கல்லூரியின் இயக்குநர், முதல்வர், குழு ஒருங்கிணைப்பாளர் மற்றும் பாடநெறி ஆசிரியர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**முடிவுரை:**

ஸ்ரீ திருமலைவாசன் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் தயாரிப்பு நிறுவனம், மரவள்ளிக் கிழங்கின் மகத்துவத்தை உலகிற்கு கொண்டு செல்லும் ஒரு முன்னோடி நிறுவனமாக திகழ்கிறது. நவீன தொழில்நுட்பத்தையும் பாரம்பரிய முறைகளையும் இணைத்து, தரமான தயாரிப்புகளை வழங்கி, உள்ளூர் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றுகிறது. பசுமை ஆற்றலை பயன்படுத்தி, சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் செயல்படும் இந்த நிறுவனம், எதிர்கால சந்ததியினருக்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது.


மு. தீக்ஷனா, செ. சக்தி,<br>
தி. ஷண்முகப்பிரியா,<br>
ப. ஸ்ரீதிகா, பா. கிருத்திகா, ந. ஜனனி,<br>
ப. அக்ஷயா, சி. நிஷா, சோ. தனிஷா.<br>
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்<br>
மணக்கடவு, பொள்ளாச்சி


### நீர்ப்பாசன மேலாண்மை

**நெல்:**

- நீர் பாய்ச்சுவது மற்றும் காயவிடல் (Alternate Weting & Drying (AWD)) முறையை பின்பற்றுவது சிறந்த முறையாகும்.
- பாசன நீர்நிலை குறைவாக இருந்தால் பாசன வடிகால் மற்றும் குழாய் முறைக்கான திட்டமிடல் அவசியம்.

**பருப்பு வகைகள்:**

- மானாவாரி சாகுபடியில் பருப்புப் பயிர்கள் சிறந்த பலனளிக்கிறது.
- விதைக்கும் போது, மற்றும் பூக்கும் / காய் பிடிக்கும் கட்டங்களில் மட்டும் தேவையான பாசனம் செய்யவும்.
- பசுமை உரங்கள் மண்ணின் ஈரத்தன்மையை மேம்படுத்தும்.





# ஜெய்ராக் நிறுவனம் – விவசாயிகளின் நம்பிக்கை, பசுமைப் புரட்சியின் முன்னோடி!

**துறையூரின் வேளாண் முன்னோடி**

தமிழ்நாட்டின் துறையூரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ஜெய்ராக் நிறுவனம், 1976 ஆம் ஆண்டு திரு. ராஜாராம் மற்றும் திரு. கனகராஜ் ஆகியோரின் தொலைநோக்குப் பார்வையில் தொடங்கப்பட்டது. இன்று, இது வேளாண் இரசாயனத் துறையில் முன்னணி நிறுவனமாக விளங்குகிறது, விவசாயிகளின் நம்பிக்கையைப் பெற்று, அவர்களின் விளைச்சலை அதிகரிக்கவும், பாதுகாக்கவும் பல்வேறு பூச்சிக்கொல்லிகள், பூஞ்சைக்கொல்லிகள் மற்றும் உயிரிப்பொருட்களை உற்பத்தி செய்கிறது.

**வளர்ச்சியின் பாதை**

சிறிய அளவில் தொடங்கிய ஜெய்ராக் நிறுவனம், இன்று வேளாண் இரசாயனத் துறையில் முக்கிய நிறுவனமாக வளர்ந்துள்ளது. திரு. ராஜாராம் மற்றும் திரு. கனகராஜ் ஆகியோரின் அர்ப்பணிப்பு மற்றும் தொலைநோக்குப் பார்வை, இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும். இப்போது, ஆர். செந்தில்குமார் மற்றும் எஸ். விவேகநாதன் ஆகியோர் நிறுவனத்தை வெற்றிகரமாக வழிநடத்தி வருகின்றனர்.

**தரக்கட்டுப்பாடு மற்றும் அரசு அங்கீகாரம்**

ஜெய்ராக் நிறுவனம், தமது தயாரிப்புகளின் தரத்தை உறுதி செய்ய சி.ஐ.பி. (CIP) சான்றிதழுக்காக விண்ணப்பித்துள்ளது. வேளாண் இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் அனுமதியுடன் ஆய்வகம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன, இது நிறுவனத்தின் தரத்தையும், அரசின் விதிமுறைகளுக்கு உண்டான இணக்கத்தையும் உறுதி செய்கிறது.

**தொலைநோக்கு மற்றும் குறிக்கோள்**

செலவு குறைந்த மற்றும் நிலையான வளர்ச்சி தீர்வுகளை வழங்கி, விவசாய சமூகத்தில் நம்பிக்கையை ஏற்படுத்துதல்.

தரமான தயாரிப்புகளை உடனடியாக வழங்குவதன் மூலம், விவசாயிகளின் நம்பிக்கையைப் பெறுதல்.

**உற்பத்தி மற்றும் தயாரிப்புகள்**

ஜெய்ராக் நிறுவனம், நவீன தொழில்நுட்பத்தைக் கொண்டு,

மாலத்தியான் 50% ஈ.சி. (Malathion 50% EC), குளோரிபைரிபாஸ் (Chlorpyrifos) போன்ற பூச்சிக்கொல்லிகளைத் திரவ மற்றும் தூள் வடிவங்களில் உற்பத்தி செய்கிறது. தூய்மையான மூலப்பொருட்களைப் பயன்படுத்தி, ஒவ்வொரு தயாரிப்பும் கடுமையான தரக்கட்டுப்பாட்டு சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகிறது.

**தரக்கட்டுப்பாடு மற்றும் ஆய்வக வசதிகள்**

இந்நிறுவனம், அனுபவம் வாய்ந்த நிபுணர்களால் நிர்வகிக்கப்படும் நவீன ஆய்வகங்களைக் கொண்டுள்ளது. இது தயாரிப்புகளின் உயர்தரத்தையும், செயல்திறனையும் உறுதி செய்கிறது.

**சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம்**

ஜெய்ராக் நிறுவனம், விரிவான டீலர் மற்றும் சந்தைப்படுத்தல் வலைப்பின்னலின் மூலம், தனது தயாரிப்புகளை விவசாயிகளிடம் கொண்டு செல்கிறது. சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகளுடன் நேரடித் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு, தயாரிப்புகளை அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப வழங்கப்படுகின்றது.

**சவால்கள் மற்றும் தீர்வுகள்**

விவசாயம் பல சவால்களை எதிர்கொள்கிறது, அதில் பூச்சி தொற்று, மண் வளம் குறைதல் மற்றும் இரசாயனப் பயன்பாட்டின் அதிகரிப்பு அடங்கும். ஜெய்ராக் நிறுவனம் இந்த சவால்களை சமாளிக்க, பல்வேறு நடவடிக்கைகளை கீழ்கண்டவாறு மேற்கொள்கிறது:

- **சந்தைப் போட்டி**: பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டியிட, புதுமையான தயாரிப்புகளை அறிமுகப்படுத்துகிறது.
- **நிலைத்தன்மை**: சுற்றுச்சூழலுக்கு உகந்த தீர்வுகளை வழங்குகிறது.
- **விவசாயிகள் விழிப்புணர்வு:** பயன்பாடு பாதுகாப்பு குறித்து விவசாயிகளுக்கு தேவையான அறிவை அளிக்கிறது.
- **ஒழுங்குமுறை இணக்கம்**: அரசின் விதிமுறைகளுக்கு இணங்க செயல்படுகிறது.

**சாதனைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள்**

ஜெய்ராக் நிறுவனம், விவசாயிகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்தி, வளங்குன்றா வேளாண் முறைகளை ஊக்குவிக்கிறது. இணையவழி விற்பனையை அதிகரித்து, இந்தியாவின் பிற பகுதிகளிலும் தனது சேவைகளை விரிவாக்க திட்டமிட்டுள்ளது.

**முடிவுரை**

நிலையான விவசாயத்திற்கும், லாபகரமான வளர்ச்சிக்கும் இடையே சமநிலையை ஏற்படுத்தி, ஜெய்ராக் நிறுவனம், விவசாயிகளின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது. தரமான தயாரிப்புகள், புதுமையான அணுகுமுறை மற்றும் சமூகப் பொறுப்புணர்வு ஆகியவற்றின் மூலம், இது தமிழ்நாட்டின் வேளாண் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஜெ.அ. அக்ஷயா, இ. சுபஸ்ரீ,
நா. ஷண்முகப்ரியா, அ. பவித்ரா, வி. ஜனிசா,
சி. சஞ்ஜுவிதா, செ. தெய்வ லஷ்மி காயத்ரி,
அ. கிருஷ்ணா, செ. திரிஷா.
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி

**✻ வாழப்பாடி, சேலம் மாவட்டம் ✻**



# SKA டைரி ஃபுட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் ஒரு பார்வை

பிப்ரவரி 17, 2025 அன்று, நாங்கள் சேலத்தில் அமைந்துள்ள SKAடைரி ஃபுட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தை பார்வையிட்டோம். இந்த நிறுவனம் 2010 ஆம் ஆண்டு வெங்கடேசன் சோமசுந்தரம் மற்றும் தண்டபாணி சோமசுந்தரம் ஆகியோரால் நிறுவப்பட்டது. தென்னிந்தியாவின் முன்னணி பால் நிறுவனங்களில் ஒன்றாக வளர்ந்துள்ள இது, அர்ஜூனா (Arjuna) என்ற பிராண்டின் கீழ் பால் மற்றும் பால் சார்ந்த பொருட்களை சந்தைப்படுத்தி வருகிறது.

**நிறுவனத்தின் நோக்கம்**

மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில், ஆரோக்கியமான மற்றும் நம்பகமான பால் தயாரிப்புகளை வழங்குவதே இந்த நிறுவனத்தின் முக்கியமான நோக்கமாகும்.

**நிறுவன கட்டமைப்பு**

இந்த நிறுவனத்தில் 7 இயக்குநர்கள் பணியாற்றுகிறார்கள். இதில், நான்கு பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்களாகவும், மூவர் பஞ்சாபைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர். மொத்தம் 300 ஊழியர்கள் இங்கு பணியாற்றுகிறார்கள்.

**முக்கிய தயாரிப்புகள்**

**டோன்டு பால்** - 3% மற்றும் 8.5% கொழுப்பு உடைய பால் வீட்டு நுகர்வுக்கு ஏற்றது. தேநீர், காபி போன்றவற்றின் சுவையை மேம்படுத்துகிறது.

**தரப்படுத்தப்பட்ட பால்** - 4.5% மற்றும் 8.5% கொழுப்பு, கொண்ட பால், குறிப்பாக குழந்தைகளுக்கு ஏற்றது.

**தங்கப்பால்** - 5% மற்றும் 9% கொழுப்பு, கொண்ட பால், எருமை பாலுக்கு இணையான கிரீமி சுவை கொண்டது.

**முழு கிரீம் பால்** - 6% மற்றும் 9% கொழுப்பு கொண்ட இந்த பால், ஐஸ்கிரீம் மற்றும் இனிப்புகள் தயாரிக்க மிகவும் ஏற்றது.

**கொழுப்பு நீக்கப்பட்ட பால் - பவுடர்** 1.5% கொழுப்பு மற்றும் 35% புரதம் கொண்ட சத்தான தயாரிப்பு. இது உயர் தரத்தில் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் தயாரிக்கப்படுகிறது.

**முழு பால் பவுடர்** - 26% கொழுப்பு, 26% புரதம் கொண்ட உடனடியாக கரையக்கூடிய பவுடர்.

**நெய்** - 99.9% பால் கொழுப்புடன், தேர்ந்தெடுக்கப்பட்ட உயர் தர பசுமாடுகள் பாலில் இருந்து தயாரிக்கப்படுகிறது.


**வெண்ணெய்** - தூய பால் கிரீமில் இருந்து இயந்திரத்தின் மூலம் தயாரிக்கப்படுகிறது. இது 82% கொழுப்பு கொண்டது.

**சுவையூட்டப்பட்ட பால்** - பாதாம், பிஸ்தா, சாக்லேட், ரோஸ், கருப்பட்டி போன்ற சுவைகளில் கிடைக்கிறது. இதில், கருப்பட்டி பால் அதிக வரவேற்பு பெற்றுள்ளது.

**தயிர்** - கூடுதல் கொழுப்புடன், பாக்டீரியா நொதித்தல் மூலம் தயாரிக்கப்படுகிறது. சீரான அமைப்பும், சுவையும் இதன் முக்கிய அம்சம்.

**மூலப்பொருள் கொள்முதல் மற்றும் செயல்முறை**

இந்நிறுவனம் விவசாயிகளிடமிருந்து தினசரி 6 லட்சம் லிட்டர் பாலை கொள்முதல் செய்கிறது. பின்னர், இந்த பால் $5^0C$ க்கு குறைவாக இருக்கும் குளிரூட்டும் மையங்களில் பாதுகாக்கப்படுகிறது. பாலின் பாதுகாப்பு காலம் 3 நாட்கள் ஆகும்.




**நிறுவனத்தின் மதிப்புகள்**

1. **தரம்**:

தரம் என்பது SKA நிறுவனத்தின் அடிப்படைக் கொள்கையாகும். பால் மற்றும் பால் சார்ந்த தயாரிப்புகளில் உன்னதத் தரத்தை நிலைநிறுத்துவது மட்டுமல்லாமல், ஒவ்வொரு உற்பத்தி செயல்முறையிலும் தரக் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்கிறது. இந்த நிறுவனத்தின் தயாரிப்புகள் அனைத்தும் உத்தியோகபூர்வ தரச் சான்றிதழ்களை பெற்றவை என்பதே இதற்குச் சான்றாகும்.

2. **நெறிமுறை நடத்தை**:

வணிகத்தில் நேர்மையும், நெறிமுறையும் முக்கியமென நம்பும் இந்த நிறுவனம், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களிடம் ஒழுங்கு மற்றும்

மரியாதையுடன் நடந்துகொள்கிறது. அனைத்து நடவடிக்கைகளும் அறநெறிக்கேற்ப நடைபெறுவதை உறுதி செய்கிறது.

**3. புதுமை மற்றும் படைப்பாற்றல்:**

மாறி வரும் சந்தைத் தேவைகளுக்கு ஏற்ப புதிய தயாரிப்புகள் மற்றும் செயல்முறைகளை அறிமுகப்படுத்தும் முறையை இந்நிறுவனம் கடைப்பிடிக்கிறது. பால் பவுடர், சுவையூட்டப்பட்ட பால், ஐஸ்கிரீம் தயாரிப்புக்கான ஆராய்ச்சிகள் இதற்கான சான்றுகள்.

**4. பங்குதாரர் மகிழ்ச்சி:**

வாடிக்கையாளர்கள், விவசாயிகள், ஊழியர்கள் என அனைத்து பங்குதாரர்களும் நிறுவன வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். அவர்களின் நலன்களைப் பேணுவதும், அவர்கள் நிறுவனத்தில் ஒரு உரிமை உணர்வுடன் இருப்பதையும் உறுதிசெய்வது நிறுவனத்தின் முக்கியப் பொறுப்பாகக் கருதப்படுகிறது.

**5. உரிமை உணர்வு:**

ஒவ்வொரு ஊழியரும் தங்களை நிறுவனம் சார்ந்தவர்கள் என்ற உணர்வோடு பணியாற்றவேண்டுமென்பதே நிர்வாகத்தின் விருப்பம். இது குழு வேலைகளில் உற்சாகத்தை உருவாக்கி, நிறுவன வளர்ச்சிக்குத் தூணாக அமைகிறது.

**நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட சான்றிதழ்கள்**

இந்த டைரி ஃபுட்ஸ் நிறுவனம் தரத்தையும் பாதுகாப்பையும் மிகுந்த முக்கியத்துவத்துடன் பின்பற்றி வருகிறது. அதன் தயாரிப்புகள் அனைத்தும் பல்வேறு கீழ்கண்ட தேசிய மற்றும் பன்னாட்டு தரச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளன. இவை நிறுவனத்தின் நம்பகத்தன்மைக்கும், நுணுக்கமான உற்பத்தி முறைகளுக்கும் சான்றாகும்.

1. ISO (International Organization for Standardization):
2. AGMARK (Agricultural Marketing):
3. FSSAI (Food Safety and Standards Authority of India):
4. BIS (Bureau of Indian Standards):
5. Halal India:

**முடிவுரை**

SKA டைரி ஃபுட்ஸ், தினசரி 5 முதல் 6 கோடி ரூபாய் வரையிலான விற்பனையுடன், வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இது, தமிழகத்தின் இரண்டாவது பெரிய தனியார் பால் நிறுவனம் என்பதில் ஐயமில்லை. அமுல், ஆவின், ஹட்சன், ஆர்.கே.ஜி நெய் உள்ளிட்ட முன்னணி நிறுவனங்களுக்கு சப்ளை செய்யும் பெருமை இதற்கு உள்ளது. இன்னும் முக்கியமாக, எதிர்காலத்தில் ஐஸ்கிரீம் மற்றும் மில்க் ஷேக் போன்ற தயாரிப்புகளிலும் தங்களை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளனர்.

ரா. நேஹா ஸ்ரீ, செ. ஹரிபிரீத்தா,
செ. ரம்யா, சி. கிருபாஷினி, வீ. விசாலி,
ரா. ஸ்வேதா, செ. செல்வ நிஷா,
நா. தீபிகா, ச. ஸ்ரீ சா, எம். அகந்தியா.
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி



# STUDENT READY திட்டத்தின் கீழ் வாஹின் ஹோம் – தொழிற்சாலைப் பயிற்சி

வானவராயர் வேளாண்மைக் கல்லூரியின் B.Sc (Hons) வேளாண்மை பட்டபடிப்பின் நான்காம் ஆண்டு மாணவர்கள் Student READY திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஊரக வேளாண்மைப் பணி அனுபவம் பெறுவதற்காக பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, ஒன்பது மாணவர்களைக் கொண்ட குழு தேனி மாவட்டம் உத்தமபாளையத்தில் இயங்கும் வாஹின் ஹோம் மேட் ஃபுட் புரொடக்ஸ் என்ற நிறுவனத்தில் பயிற்சியில் ஈடுபட்டனர்.

இந்நிறுவனம் 2016ல் சென்னையில் தொடங்கப்பட்டது. திருமதி. P. ஹேமா அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. துவக்கத்தில் சிறுதானியங்களைக் கொண்டு சத்துமாவு தயாரித்து, மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது. தற்போதைய நிலையில், இந்த நிறுவனம் 60க்கும் மேற்பட்ட மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை உருவாக்கி, தேனி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு நேரடி மற்றும் இணையவழியில் விற்பனை செய்து வருகிறது. அமேசான், பிளிப்கார்ட், மீசோ போன்ற இணைய தளங்களின் மூலமும் இவர்கள் விற்பனையை மேற்கொள்கின்றனர். இந்த நிறுவனம் MSME- கீழ் பதிவு செய்யப்பட்டு, PMEGP திட்டத்தின் மூலம் 35% மானியம் பெற்றுள்ளது.

**செயல்பாடுகள்:**

மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை உருவாக்க அரைக்கும் இயந்திரம், தானியம் வறுக்கும் இயந்திரம் மற்றும் எடை போடும் இயந்திரங்கள் போன்றவற்றை மானியத்தின் கீழ் பெற்று பயன்படுத்துகின்றனர்.

**மூலப் பொருட்கள் கொள்முதல்:**

தேனி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலிருந்து மூலப்பொருட்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

**தொழிலாளர் மேலாண்மை:**

மூன்று பெண் தொழிலாளர்கள் தினக்கூலி அடிப்படையில் (நாள் ஒன்றுக்கு ரூ. 300) பணிபுரிகின்றனர்.

**உற்பத்தி செய்யப்படும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள்:**

ABC இன்ஸ்டன்ட் மிக்ஸ் (ஆப்பிள், பீட்ரூட், கேரட்), சிறுதானிய பிஸ்கட் மற்றும் கேக்குகள், பூண்டு மற்றும் மாங்காய் ஊறுகாய், முளைக்கட்டிய கேழ்வரகு தூள், (ராகி மால்ட்) குழந்தைகளுக்கான சத்துமாவு (எடை அதிகரிக்க/ குறைக்க) & சிறுதானிய சாக்லேட்டுகள்.

**பேக்கேஜிங் முறைகள்:**

வெள்ளி சுருள் (Silver coil) பேக்கேஜிங் முறையில் பொருட்களை சுகாதாரமாகவும் பாதுகாப்பாகவும் நிரப்பி, பிளாஸ்டிக் பாகெட்டுகள் சீல் செய்யும் இயந்திரங்கள் மூலம் சீல் செய்து விற்பனைக்கு அனுப்புகின்றனர்.

**விற்பனையில் உள்ள சவால்:**

போக்குவரத்து வசதிகள் குறைவாக இருப்பதால், தூதஞ்சல் சேவைகள் மூலம் பொருட்களை அனுப்பி விற்பனை செய்வதை மேற்கொண்டுள்ளனர்.

**கருத்துகள்:**

மாணவர்கள் செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளையும் நேரடியாக செய்து பார்த்து அனுபவமடைந்தனர். இம்முறையில் விவசாயிகளுக்கு மிகுந்த பலன் இருக்கிறது. ஏனெனில், விவசாயி அவருடைய பொருட்களை அறுவடை செய்த பின் உடனடியாக விற்பனை செய்வது ஓரளவு தான் லாபத்தை ஈட்டும். அதற்கு பதிலாக இது போன்ற மதிப்பு கூட்டு பொருளாக மாற்றி அவற்றை விற்பனை செய்யும்பொழுது அவர்களின் லாபமும் இரட்டிப்பாகும். மேலும் இது போன்ற தொழில்கள் பெண் தொழில் முனைவோர்களுக்கு ஒரு சிறந்த உந்துதலாக அமையும். இது போன்ற பல வாய்ப்புகள் இருப்பதை விவசாயிகளுக்கும், பெண் தொழிலாளர்களுக்கும் தெரியப்படுத்துவது மிகவும் முக்கியமாகும்.



ரா. அமர்நாத், உ. தர்ஷன், அ. ஜெகத்ரட்சகன்,
ச. கவின், செ. மோகன் ராம், சு.பிரனேஷ்
ச. ராம்குமார், சு.க. சர்வேஷ்,
ப.க. விஜய்கார்த்திக்.
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி.

# "மாம்பழ நறுமணத்தில் உலகை கட்டிப்போட்ட கிருஷ்ணகிரி! மாஃப்ரெஷின் வெற்றிக் கதை"

தமிழகத்தின் மண் வாசனையோடும், கிராமத்து உழைப்பின் தேனோடும் உலக சந்தையில் தனி இடம் பிடித்திருக்கும் நிறுவனம்தான் மாஃப்ரெஷ் அக்ரோ.

கடந்த 2008ஆம் ஆண்டு, "பிறர் நம்பிக்கையை நாம் உருவாக்கவேண்டும்!" என்ற தன்னம்பிக்கையோடு, கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை உருவாக்கும் உயர்ந்த நோக்கத்துடன் இந்நிறுவனம் நிறுவப்பட்டது.

கிருஷ்ணகிரியின் கருவிழி போல் இருந்த இந்த நிறுவனம், இன்று உலக நாடுகளுக்கே தமிழின் மாம்பழ இனிமையை பரிமாறி வருகிறது.

அவர்களின் சிறப்பு என்னவென்றால், நேரடியாக விவசாயிகளிடம் இருந்து பசுமை பூத்த பழங்களை கொள்முதல் செய்து, இயற்கையின் புதுமையை அப்படியே நுகர்வோரிடம் கொண்டு சேர்ப்பதுதான்.

**சிறந்த இடம், சிறந்த கனிகள்**

மாஃப்ரெஷின் உற்பத்தி ஆலை, தமிழ்நாட்டின் மாம்பழ சாகுபடிப் பகுதியில் பெயர்பெற்ற கிருஷ்ணகிரியில், விமான மற்றும் சாலை வசதிகளுடன் இணைக்கப்பட்ட 4 ஏக்கர் விரிந்த பசுமை நிலத்தில் இருக்கிறது. ஆலைக்கு சுற்றிலும் 50 கி.மீ சுற்றளவில் 40,000 ஹெக்டேர் பரப்பளவில் மாம்பழங்கள் பயிரிடப்படுகின்றன. வருடத்தில் மே, ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் செயல்படும் இந்த ஆலையில் ஆண்டுக்கு சுமார் 10,000 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது!

உலகத்தின் உலா சுற்றும் "அல்போன்சா" மற்றும் "தோத்தாபுரி" வகை மாம்பழ கூழ்கள் இங்கிருந்து அமெரிக்கா, ஐரோப்பா, சீனா வரை அனுப்பப்படுகின்றன.

**இயற்கையின் சுவை இங்கு ஒவ்வொருவரின் மடியில்!**

**இந்த மாஃப்ரெஷ் தயாரிப்புகளில்:**

- செயற்கை வண்ணம் இல்லை!
- செயற்கை ரசாயனம் இல்லை!
- 100 சதவீதம் இயற்கை ருசி மட்டும் உள்ளது!

அவர்கள் தயாரிப்புகள் அனைத்தும் ISO 22000-2005, FSSAI, Halal India போன்ற உயர்ந்த தரச் சான்றிதழ்கள் பெற்றவை.

*மாற்று பயிரிடல் முறையை பின்பற்றுவதால் பூச்சி தாக்கம் குறையும்.*











"பழத்தின் பசுமை தொட்ட கைகளால், உலகத்துக்கு இயற்கையை பரிமாறுகிறோம்" - இதுவே மாஃப்ரெஷின் மனப்பான்மை.

**மூன்று தூண்களின் வெற்றியின் சக்கரம்**

மாஃப்ரெஷ் நிறுவனம் மூன்று முக்கிய இயக்குநர்களால் இயக்கப்படுகிறது:

- **திரு. எஸ். சிவகுமார்** அமெரிக்க அனுபவம் கொண்ட மேலாண்மை இயக்குநர்.
- **திரு. எஸ். தம்பிதுரை** ஏவியோனிக்ஸ் துறையில் தேர்ச்சி பெற்ற இயக்குநர்.
- **திரு. கே. மணிமாறன்** வெளிநாட்டு சந்தைப்படுத்தலில் வல்லவராக திகழும் தலைவர்.

இவர்கள் மூவரும் தங்கள் துறையில் தனித்திறமை கொண்டு, மாஃப்ரெஷின் வளர்ச்சியை நகர்த்துகிறார்கள்.

**இங்கே தயாரிக்கப்படும் சுவை பரிமாற்றங்களின் பட்டியல்:**

- அல்போன்சா மாம்பழ கூழ்
- தோத்தாபுரி மாம்பழ கூழ்
- அல்போன்சா இனிப்புப் பசையம்
- வெள்ளை கொய்யா கூழ்
- இளஞ்சிவப்பு கொய்யா கூழ்
- தக்காளி கூழ்

இவையாவும் மடியில் மென்மை, நாவியில் இனிமை என்பதை உணர்த்தும் வகையில் தயாரிக்கப்படுகின்றன.

**தரம் என்றால் மாஃப்ரெஷ் தான்!**

- தரத்தில் எந்தவிதமான சமரசமும் செய்யாமல், தொடக்கம் முதல் முடிவு வரையிலான கண்காணிப்பு
- சர்வதேச தரமானப் பரிசீலனைகள்
- சுகாதாரம் மற்றும் பாதுகாப்பில் கடுமையானதாக கட்டுப்பாடுகளை பின்பற்றுவதால், இந்நிறுவனத்தின் மீது வாடிக்கையாளர்களின் நம்பிக்கை ஓங்கி வளர்த்து வருகிறது.

**தொழில்நுட்ப உள்கட்டமைப்பு**

மாஃப்ரெஷின் உற்பத்தி மையம் மிகுந்த தொழில்நுட்ப வசதிகளை கொண்டது:

- கிடங்கு: 18,000 சதுர அடி
- பழுக்க வைக்கும் கொட்டகைகள்: 30,000 சதுர அடி
- செயலாக்க மையம்: 7,200 சதுர அடி
- பழப் பிரிவு: 3,600 சதுர அடி

இவை அனைத்தும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் கட்டமைக்கப்பட்டுள்ளன.

**முடிவுரை**

மாஃப்ரெஷ் ஒரு தொழிலின் வெறும் பெயர் அல்ல, இது தமிழக விவசாயத்தின் கனவையும், உழைப்பையும், உலகில் பரப்பும் கனியும் ஆகும். தரமும், பொறுப்பும், புதுமையும் ஒன்றாகத் தொடரும் இந்த நிறுவனத்தின் பயணம், தமிழின் பெருமையை உலக வரைபடத்தில் சிறப்பாக பதியச் செய்கிறது.

பா. விக்னேஷ், க. ருத்ரகுமார், க. அபிஷேக்,
ப. ஹரிசுதன், ஜோயல் டாம்,
வெ. ராகுல் வருணன், மு. முகமது அஜீம்,
பா.ப. தனுஷ்மணிகண்டன்,
கே.எஸ்.நித்யானந்தம்.
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி.



# உலகம் நோக்கும் தர்மபுரியின் பசுமை: மஹா விவசாயப் பொருட்கள் நிறுவனம்

### நிறுவனத்தின் தோற்றம்




1994 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட மஹா விவசாயப் பொருட்கள் (Maha Agri Products Private Limited), தமிழ்நாட்டின் தர்மபுரி மாவட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் ஒரு முன்னணி உணவுப் பொருள் தயாரிப்பு நிறுவனம் ஆகும். உலக தரநிலைகள் மற்றும் நிலைத்த வளர்ச்சிக் கொள்கைகளுடன் இணைந்து, உயர் தரமான விவசாய உற்பத்திகளை உருவாக்குவதிலும் விநியோகிப்பதிலும் இந்நிறுவனம் முக்கிய கவனம் செலுத்துகிறது.

### முக்கிய தயாரிப்புகள்

இந்த நிறுவனம் பன்முக காய்கறி தயாரிப்புகளை வழங்குகிறது. அவற்றுள் முக்கியமானவை:

- ஊறுகாய் வகைகள் (மட்டன் வெள்ளரிக்காய் போன்றவை)
- பேபி கார்ன்
- ஜலப்பெனோ மிளகாய்
- பச்சை மிளகாய்

இந்த தயாரிப்புகள் அனைத்தும் சிறந்த தரம் கொண்ட பசுமை விவசாயப் பண்ணைகளிலிருந்து பெறப்பட்டவை. சர்வதேச தர அளவுகோள்களுக்கு ஏற்ப பதப்படுத்தப்பட்டு, ஏற்றுமதிக்குத் தயார் செய்யப்படுகின்றன. குறிப்பாக, ஊறுகாய் வகைகள் உணவகங்கள், ஹோட்டல்கள் மற்றும் உபயோகப் பொருள் தயாரிப்புகளுக்கு ஏற்ற முறையில் தயாரிக்கப்படுகின்றன.

### உள்கட்டமைப்பும் வசதிகளும்

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு தாலுகாவில் உள்ள தண்டகரணஹள்ளி கிராமத்தில் இந்நிறுவனத்தின் உற்பத்தி மையம் இயங்குகிறது. இங்கே மேம்பட்ட இயந்திரங்கள் மற்றும் உற்பத்தி வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. தர பரிசோதனை, வகைப்படுத்தல் மற்றும் பேக்கேஜிங் என அனைத்துத் துறைகளும் ஒரே வளாகத்திலேயே ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன. இது தரத்தையும் செயல்திறனையும் உயர்த்துகிறது.

### சந்தைப் போக்கு மற்றும் ஏற்றுமதி

வட அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியா போன்ற உலக சந்தைகளுக்குப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கனடாவில் உள்ள Marcus QED Inc. மற்றும் Montrose International Group போன்ற உலகளாவிய வாடிக்கையாளர்களுடன் நிறுவனத்துக்கு உறுதிப் பார்வை உண்டு. இத்துடன், உணவுத் தயாரிப்புகளில் தரமும் நம்பகத்தன்மையும் முக்கியத்துவம் வாய்ந்ததாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

**தரத் தகுதிகள் மற்றும் சான்றிதழ்கள்**

HACCP, ISO 22000 மற்றும் BRC போன்ற சர்வதேச தர சான்றிதழ்களை பெற்றிருக்கும் இந்நிறுவனம், உணவுப் பாதுகாப்பையும் தரத் தகுதியையும் மிகுந்த கவனத்துடன் கையாளுகிறது. நிலைத்த வளாக வளர்ச்சி, மண் ஆரோக்கியம், நீர் மேலாண்மை ஆகியவையும் இந்நிறுவனத்தின் செயல்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**பசுமை நீர் சுத்திகரிப்பு ஆலை**

கழிவு நீரை சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட இந்த சுத்திகரிப்பு ஆலை, இயற்கை சக்திகளைப் பயன்படுத்தி செயல்படுகிறது. சூரிய சக்தியை பயன்படுத்தி உலர்த்தும் மற்றும் வெப்பமூட்டும் உபகரணங்கள் உள்ளடக்கிய இந்த அமைப்பு, மறு சுழற்சி சிந்தனையில் ஒரு முன்னோடியாக விளங்குகிறது.

**சவால்கள் மற்றும் தீர்வுகள்**

பருவநிலை மாற்றங்கள், ஒழுங்குமுறை மாற்றங்கள் மற்றும் சர்வதேச போட்டி போன்ற சவால்களை எதிர்கொள்ளும் இந்நிறுவனம், நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடனான உறுதியான தொடர்புகள் மூலம் சவால்களை சமாளிக்கின்றது.



**எதிர்காலக் காட்சிப்படம்**

தனது தயாரிப்புகளின் வரம்பை விரிவுபடுத்துவதையும், புதிய சந்தைகளை ஆராய்வதையும், நிலைத்த வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட விவசாய முறைகளை ஊக்குவிப்பதையும் இந்நிறுவனம் தனது இலக்குகளாகக் கொண்டுள்ளது. ஆய்வு மற்றும் மேம்பாடு (R&D), சப்ளை செயின் மேலாண்மை மற்றும் ஒழுங்குமுறை வளர்ச்சி இவற்றில் அதிக முதலீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**முடிவுரை**

தரநிலை, நிலைத்தன்மை மற்றும் வாடிக்கையாளர்களின் திருப்திக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த மஹா விவசாயப் பொருட்கள் நிறுவனம், இந்தியாவின் விவசாய உணவுப் பொருட்கள் துறையில் முன்னணி இடத்தைப் பிடித்து வருகிறது. தெளிவான பார்வையும், உறுதியான தரநிலையும் கொண்ட இந்த நிறுவனம், உலக சந்தையில் மேலும் வளரத் தயாராக உள்ளது.

ஆ. அவினாஷ், கணேஷ் முரளி,
மா. ஜீவானந்தம், ச. கிருபா சங்கர்,
வே. நவீன் குமார், ச. ராகவேந்தர், ப. ரோகித்,
மா. சுரேஷ்கிருஷ்ணா, ர. விக்ரம்.
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி.



# விவசாயத்தில் புதிய வழிகாட்டி: கிரிஷி ஆக்ரோ இன்டஸ்ட்ரீஸ் “தஃபார்மொவேட்”

விவசாய தொழில்நுட்ப வளர்ச்சியில் புதிய நுட்பங்களை அறிமுகப்படுத்தும் கிரிஷி ஆக்ரோ இன்டஸ்ட்ரீஸ் நிறுவனம், உயிர் உரங்கள் மற்றும் நவீன பண்ணைத் தீர்வுகளின் மூலம் கிராமப்புறங்களில் புதுமையான மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

இந்த நிறுவனத்தை திரு. அகிலன் மற்றும் திரு. கோகுல் என்ற இரு இளைய பொறியியல் பட்டதாரிகள் நிறுவியுள்ளனர். தொழில்முனைவோர்களாகத் தங்களை நிலைநாட்டிக்கொண்ட இவர்கள், 10 ஏக்கர் நிலப்பரப்பில், 6000 சதுர அடிகள் கொண்ட உற்பத்தி கூடத்தில், இந்திய நிலம் மற்றும் காலநிலைக்கு ஏற்ற வகையில் உயிர் தயாரிப்புகளை உருவாக்கி வருகின்றனர்.

**தயாரிப்புப் பலம்**

விவசாய உற்பத்தியை உயர்த்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட இந்நிறுவன தயாரிப்புகளில்,

- வெர்மி கம்போஸ்ட்
- கம்போஸ்ட்
- பாஸ்பரஸ் நிறைந்த PROM உயிர்சார் உரம்
- CMS சேர்க்கப்பட்ட உயிர்சார் உரம்
- மீன் அமினோ அமிலம்
- நுண்ணூட்டப் பொருட்கள்
- ஹ்யூமிக் பவுடர்
- உயிர்சார் பொட்டாஷ்
- உயிர்சார் NPK
- எலும்புத்தூள்
- கடல்நீர் சத்துக்கள்

என்பவைகள் முக்கிய இடம்பெறுகின்றன.

மேலும், சூப்பர் நேப்பியர், ஹெட்ஜ் லூசர்ன், கம்பு நேப்பியர் (CO 4) போன்ற தீவன பயிர்கள் பயிரிடப்பட்டு, அதன் இலைகள் பண்ணை மாடுகளுக்கு உணவாகவும், விதைகள் ஏற்றுமதிக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

**விற்பனை, ஏற்றுமதி, சந்தை**

தங்களது தயாரிப்புகளை இணையதளங்களை மையமாகக் கொண்டு இந்தியா முழுவதும் விவசாயிகளிடம் வியாபாரம் செய்து வருகின்றனர். விலை நியாயமாக, உள்ளதால் வாடிக்கையாளர்கள் தொடர்ச்சியாக நம்பிக்கையுடன் தேடிக்கொண்டு வருகிறார்கள்.

**விலை விவரங்கள் (தேர்ந்தெடுத்தவை):**

- வெர்மிகம்போஸ்ட் (50கி): ₹300
- உயிர்சார் NPK (50கி): ₹ 900
- எலும்புத்தூள் (50கி): ₹ 1250
- கடல்நீர் சத்துக்கள் (1கி): ₹ 450
- மீன் அமினோ அமிலம் (1லிட்டர்): ₹250

**சவால்களும் தீர்வுகளும்**

மாநிலங்களுக்கு இடையே போக்குவரத்து செலவுகள் மாறுபடுவதால் முதலீட்டுச் சுமை அதிகமாகிறது. மேலும், உயிர்சார் உரங்களின் பயன்கள் குறித்த விழிப்புணர்வு இன்னும் பல இடங்களில் இல்லாத நிலையில் உள்ளது.

தங்கள் தயாரிப்புகளில், குறிப்பாக வெர்மிகம்போஸ்டின் ஈரப்பதம் குறைவாக வழங்கப்பட்டாலும், வாடிக்கையாளர்கள் சில நேரங்களில் முறையீடு செய்வது சவாலாக இருக்கிறது.

**SWOC பகுப்பாய்வு**

**வலிமை:(S)**

**பரந்த தயாரிப்பு வரிசை**

- சொந்த பண்ணை வளங்களை உற்பத்திக்கு பயன்படுத்தல்
- (கிரிஷி விக்யான் கேந்திரா) உடன் கூட்டாண்மை
- தரமான தயாரிப்புகள்

**பலவீனம்:(W)**

- தொடக்க முதலீடு அதிகம்
- கிராமப்பகுதிகளில் விழிப்புணர்வு குறைவு

**வாய்ப்பு:(O)**

- டிஜிட்டல் சந்தைப் விரிவாக்கம்
- சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி
- உயிருக்கேற்ப தயாரிப்புகளுக்கான தேவையின் வளர்ச்சி

**சவால்:(C)**

- காலநிலை மாற்றங்களால் உற்பத்திக்கு ஏற்பட்ட தடைகள்
- மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தாழ்வுகள்

**பரிந்துரை**

தங்களது தயாரிப்புகளை நேரடியாக விவசாயிகளிடம் விற்பனை செய்வதன் மூலம் இடைநிலைச் செலவுகளை குறைத்து, அதிக நிகர லாபத்தை பெற முடியும்.

விவசாய கண்காட்சி, கருத்தரங்குகள், வேளாண் தொழில்நுட்ப நிகழ்வுகள் போன்றவற்றில் பங்கேற்று விழிப்புணர்வை அதிகரிக்கலாம். இது வாடிக்கையாளர்களின் நம்பிக்கையையும் வலுப்படுத்தும்.

**முடிவுரை**

கிரிஷி ஆக்ரோ இன்டஸ்ட்ரீஸ், உயிர் தயாரிப்புகள், நவீன தொழில்நுட்ப மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற நடைமுறைகளை முன்னெடுத்துச் செல்கிறது. விவசாய உற்பத்தியை மேம்படுத்துவதிலும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை நிலைநாட்டுவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இது, இந்திய விவசாயத் துறையின் எதிர்கால வளர்ச்சிக்கு ஒரு உறுதியான அடித்தளமாக அமைத்துள்ளது.

இ. ஆதித்யா, ஆர்யா, செ. ஹரி தாரணி,
மோ. கீர்த்தனா, ப. மேஹா, க. ராகவி,
இரா. சத்யலட்சுமி, ம. சுவிதா,
பா.ரா. சௌமியா, ர. வசித்ரா.
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி.




# விவசாயத்தில் உயிர்சார் புரட்சியின் முன்னணி: பவன் பயோ டெக் இந்தியா

உயிர்சார் விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் 2009ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பவன் பயோ டெக் இந்தியா நிறுவனம் இரசாயனங்களைத் தவிர்த்து நிலைத்த, பசுமை வழிகளைப் பின்பற்றி செயல்படும் முன்னணி நிறுவனமாக திகழ்கிறது. தற்போது தமிழ்நாட்டில் ஒன்பது மாவட்டங்களில் ஆண்டுக்கு 3,000 டன்க்கும் அதிகமான உயிர் தயாரிப்புகளை வழங்கி, விவசாயத் துறையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**நிறுவனத்தின் அமைப்பு (Company Profile)**

- பெயர்: பவன் பயோ டெக் இந்தியா பிரைவெட் லிமிடெட்.
- துவக்கம்: 2009
- தலைமை நிலையம்: தமிழ்நாடு, இந்தியா
- தொழில்: உயிர் உரங்கள் தயாரித்தல் மற்றும் நிலைத்த விவசாய தீர்வுகள் கொடுத்தல்
- ஆண்டு உற்பத்தி: 3,000 டன் மேல்
- சேவை பரப்பளவு: தமிழ்நாட்டின் 9 மாவட்டங்கள்

**நோக்கமும் பார்வையும் (Mission & Vision)**

**தொழில் நோக்கம்:**

இரசாயனங்களை தவிர்த்து, சூழலுக்கு இனிமை தரும் விவசாயத்தை ஊக்குவித்து, மண்ணின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, பயிர்ச்செறிவை உயர்த்துவது.

**தொழில் பார்வை:**

உயிர்சார் விவசாயத்தில் தமிழ்நாட்டை முன்னணி மாநிலமாக மாற்றி, விவசாயக் குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் வழிகாட்டியாக செயல்படுவது.

**முக்கிய செயல்திட்டங்கள் (Key Strategies)**

**புதிய தயாரிப்புகள்:**

வட்டார நிலங்களின் சவால்களான மண் பாதுகாப்பு, பூச்சி தாக்கம், காலநிலை மாற்றம் ஆகியவற்றுக்கு சிறப்பான உயிர்சார் தீர்வுகளைப் பவன் பயோ டெக் உருவாக்குகிறது.

**தரக் கட்டுப்பாடு:**

அனைத்து தயாரிப்புகளும் உற்பத்திக்கு முன், உயர் தர சோதனைகளை கடைபிடிக்கின்றன.

## ❋ அரூர், தர்மபுரி மாவட்டம் ❋

**விவசாய தொடர்பு:**

பயன்பாடு குறித்த பயிற்சிகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் மூலம் விவசாயிகளுடன் நேரடி தொடர்பு வலுப்படுத்தப்படுகிறது.

**பிரதான தயாரிப்புகள் மற்றும் பயன்கள்**

**Agro Rich Plus:**




மண் வளத்தை மேம்படுத்தி, பயிர் வளர்ச்சியை ஊக்குவித்து, பூச்சி மற்றும் நோய் தாக்கங்களைத் தடுக்கிறது.

**Agro Neem Plus:**




சத்து நிறைந்தது; வேர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது, பூச்சிகளை தடுக்கும் தன்மை கொண்டது.

**Bio Potash:**



இயற்கையான பொட்டாசியம் வளம். ஊட்டச்சத்து உறிஞ்சும் திறன் மற்றும் பயிரின் நிலைத்த தன்மையை மேம்படுத்துகிறது.

**Agro Power Plus:**




மண் அமைப்பு, துளையுணர்வுத் தன்மை, வேர்வளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்தி, நோய்கள் மற்றும் வறட்சிக்கு எதிரான சக்தியை தருகிறது.

**அனுமதிப்பெற்ற ஆய்வுகூடத்தில் தரநிலை பரிசோதனைக்கு உகந்த கருவிகள்:**

- Muffle Furnace
- Hot Air Oven
- EC Meter
- PH Meter
- UV Spectrometer
- Flame Photometer

இவை அனைத்தும் தயாரித்த பொருட்களின் வேதிச் சோதனைகளுக்கு பயன்படுத்தப் படுகின்றன.

**சுற்றுச்சூழலுக்கு பங்களிப்பு**

**சூழலியல் நிலைத்தன்மை:**

இரசாயனப் பயன்பாட்டைக் குறைத்ததால், மண், நீர், காற்றின் தூய்மை மேம்படுகிறது. உயிரின வகைகள் நிலைத்திருக்கும் சூழலை உருவாக்குகிறது.

**சமூக விழிப்புணர்வு:**

வட்டார விழிப்புணர்வு செயல்கள் மூலம் விவசாயிகளின் தீர்வுகளை நம்பிக்கையுடன் ஏற்க வைக்கப்படுகிறது.

**முடிவுரை**

பவன் பயோ டெக் இந்தியா உயிர்சார் தீர்வுகளின் ஊடக விவசாயத்தில் புரட்சியை ஏற்படுத்தி, விவசாயிகள் மற்றும் சூழலுக்கு நன்மை ஏற்படுத்தும் வகையில் செயல்படுகிறது. இது விவசாய வளர்ச்சி மற்றும் பசுமை நோக்கத்தை இணைத்து செயல்படும் முன்னோடி நிறுவனமாக, இது தமிழ்நாட்டின் விவசாய எதிர்காலத்திற்கு ஒரு உறுதியான அடித்தளமாக விளங்குகிறது.

க. பிரசன்னா, ச. கணேஷ் குமார்,
சி. விஜயமாறன், கூ. ரவி சுங்கர்,
க. ஜஸ்வின், சு.நரேந்திரன், நா கவின்ராஜ், மு.
ஸ்ரீ கிஷன், ப.அரவிந்தன்.
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி.




# பிரக்ஜா ஜூஸ் - கம்பம் பழங்களின் இயற்கை வரம், ஆரோக்கிய பானங்களின் வெற்றி கதை

கம்பத்தின் பசுமை வெளிகளில் இருந்து ஒரு இயற்கைச் சுவை எடுத்து, பாட்டிலில் அடைத்து மக்கள் மத்தியில் பரிமாறும் பிரக்ஜா ஜூஸ் இன்று ஒரு பிரபலமான பெயராக மாறியுள்ளது. 2015ல் ரமேஷ் குமார் தொடங்கிய இந்த சிறு முயற்சி, இன்று கம்பம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் நிலைத்த வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஆரோக்கிய பானங்களின் பிராண்டாக வேரூன்றியுள்ளது.

**பசுமையிலிருந்து பெருமைக்கு**

விவசாயம் நிறைந்த கம்பத்தில், பழங்களை வீணாக்காமல், அவற்றை ஆரோக்கிய பானங்களாக மாற்றுவது தான் ரமேஷ் குமாரின் தொலைநோக்குப் பார்வை. சிறிய கடையாக தொடங்கிய பிரக்ஜா ஜூஸ், மிகவும் குறுகிய காலத்தில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையையும், ஊர்மக்களின் ஆதரவையும் பெற்றுள்ளது.

2018-ம் ஆண்டில், பல தொழில்முறை வசதிகளை சேர்த்துக்கொண்டு, பலவிதமான புதிய பானங்களை அறிமுகப்படுத்தி, இப்போது கம்பத்தில் இயங்கும் நவீன உற்பத்தி நிலையமாக வளர்ந்துள்ளது.

**இயற்கையின் இனிமை, தொழில்நுட்பத்தின் நவீனம்**

இந்நிறுவனத்தின் தயாரிப்புகள் 100% இயற்கையானவை. செயற்கை சுவை, கலர்கள் போன்றவை எதுவும் சேர்க்கப்படுவதில்லை. புதிய பழ வகைகள், உள்ளூர் பண்ணைதொகுப்புகளிலிருந்து நேரடியாக பெற்று தயாரிக்கப்படுகின்றன.

விற்பனைகளும் உள்ளூர் சந்தைகள், ஃபேர் (Fair) நிகழ்வுகள், மற்றும் குறிப்பிட்ட வணிகக் கூடங்கள் வழியாக நடைபெறுகின்றன. ஆன்லைன் விற்பனையை தொடங்கும் திட்டமும் தற்போது செயல்பாட்டில் உள்ளது.

**சவால்களும், சிந்தனைகளும்**

கம்பத்தில் இயற்கை பானங்களுக்கான சந்தை பலதரப்பட்ட போட்டியாளர்களால் நிரம்பியுள்ளது. தரத்தின் நிலைப்பாடு பருவநிலை மாறுபாடுகளால் பழத்தின் சுவையில் ஏற்படும் மாற்றம் ஆகியவையும் பிரச்சனைகள். ஆனால் பிரக்ஜா நிறுவனம் அதனை திறம்பட கையாண்டது. அதன் புதிய தயாரிப்புகள், ஆன்டி ஆக்ஸிடன்ட் ஸ்மூத்திகள், இம்யூனிட்டி டிரிங்குகள் போன்றவை மக்களின் வரவேற்பைப் பெற்றன.

**நம்பிக்கையுடன் நெடுஞ்சாலை**

உள்ளூர் விவசாயிகளுடன் நேரடி ஒப்பந்தங்களை ஏற்படுத்தியும், பசுமை வணிகத் திட்டமாக செயல்படும் பிரக்ஜா ஜூஸ் தன்னை நிலைநிறுத்தியுள்ளது. மேலும், விழிப்புணர்வு முகாம்கள், சமூக ஊடக பிரச்சாரங்கள், விலைச் சலுகைகள் என வாடிக்கையாளர் உறவை பலப்படுத்தும் முயற்சிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**எதிர்கால வளர்ச்சி பாதை**

கம்பத்தில் வெற்றிகரமாக செயல்பட்ட பிரக்ஜா ஜூஸ் நிறுவனம், தற்போது அதன் வளர்ச்சியை தமிழகத்தின் பிற பகுதிகளுக்கும் விரிவாக்க திட்டங்களை முன்னெடுத்துள்ளது. தொழில்நுட்ப மேம்பாடுகள், நவீன உற்பத்தி வசதிகள் மற்றும் ஆன்லைன் சந்தை வாயிலாக அதிக வாடிக்கையாளர்களை கவரும் நோக்கத்தில் பயணிக்கிறது.

**சமூக பங்களிப்பும், வணிக வெற்றியும்**

பிரக்ஜா ஜூஸ் ஒரு சாதாரண ஆரோக்கிய பான நிறுவனம் என்பதை கடந்து, சமூகத்தின் நலம் மற்றும் விவசாய வளர்ச்சியுடன் கோட்பாடாக பிணைந்த ஒரு உணர்வுப் பிராண்டாக (Brand) வலம்வந்து கொண்டிருக்கிறது.

"தரம், நம்பிக்கை மற்றும் பசுமை" என்ற மூன்றுபெரும் தூண்களில் பயணிக்கும் பிரக்ஜா ஜூஸ், தமிழ்நாட்டின் இயற்கை பானம் உபயோகத்தில் ஒரு முக்கிய இடத்தை நிலைநிறுத்தியுள்ளது.





மா. கிரிதரன், செ. பரத், வி. ஆகாஷ்,
நிகில் மோகன், து. ரூபன்குமார், து.ராகுல்,
பெ. தமிழ்செல்வன், கோ.ஆ. குமரகுரு,
வெ. ஹரிஷ், இரா. ஜெயபால்.
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி.

VANAVARAYAR
Institute of Agriculture
Enriching India

Ministry of Agriculture
& Farmers Welfare.
Government of India

MANAGE
National Institute of Agricultural
Extension Management

# வேளாண் மற்றும் பொது அறிவியல் பட்டதாரிகளுக்கான 45 நாட்கள் இலவசப் பயிற்சி

## Agri Clinics & Agri Business Centre Scheme
(மத்திய வேளாண் அமைச்சகத்தின் திட்டம்)



**கல்வித் தகுதி**
வேளாண் மற்றும் பொது அறிவியல் சார்ந்த படிப்புகள்



**வயது**
18 முதல் 60 வரை





**வங்கிக்கடன்**
5 லட்சம் முதல் 1 கோடி வரை



### மானியம்
பொது பிரிவிற்கு : 36%
பெண்கள் மற்றும் இதர வகுப்பினர் : 44%

### வசதிகள்
இலவச தங்குமிடம், உணவு, பயிற்சி ஏடுகள், தொழில், நிர்வாகம் மற்றும் திட்டமிடும் பயிற்சிகள். ஆராய்ச்சி மற்றும் தொழில் நுட்ப பயிற்சி மையங்களைப் பார்வையிடுதல். வங்கிக்கான திட்ட அறிக்கைகள் தயாரித்து கொடுத்தல்.

AGRI-BUSINESS INCUBATOR ABI
அக்ரி கிளினிக் & அக்ரி பிசினஸ் சென்டர்
வானவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி(தாலுக்கா), கோவை (மாவட்டம்) - 642103
+91 74026 18009, +91 99429 08466 edp@via.ac.in www.via.ac.in



VANAVARAYAR
Institute of Agriculture

VIA




www.via.ac.in

Mail : info@via.ac.in | Phone : +91 74026 18001